# இதயகீதம்

## இராம. அரங்கண்ணல்

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி

முதற் பதிப்பு—1951

பதிப்புரிமை

விலை ரூ. 0—12—0

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திரு

# பதிப்புரை

'திராவிடநாடு திராவிடருக்கே!'—என்ற உரிமை முழக்கம் இன்று எங்கும் எதிரொலிக்கத் துவங்கிவிட்டது.

'ஆகுமா? முடியுமா?' என்று கிண்டல் பேசியவர்களெல்லாம், கிலிகொண்ட மனத்தினராய், பிரிவினைப் பிரச்னைபற்றிப் பேசத் தலைப்பட்டுவிட்டனர்.

"வீண் கோரிக்கை" என்று கூறப்பட்ட அபவாத மொழி, நியாயம் நிரம்பிய ஆதாரங்களின் மூலம் இன்று தகர்த்தெறியப்பட்டு வருகிறது.

அத்தகைய ஆதாரம் நிரம்பிய, 'திராவிடநாடு' இதழிலே அப்போதைக்கப்போது வெளிவந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கண்ட பொழுதெல்லாம், இவைகளைச் சேர்த்து ஒன்றாக்கி மக்கள் மன்றத்துக்குப் படைக்க வேண்டும் என்று எண்ணுவேன்.

ஒரு நாள், நண்பர் அரங்கண்ணல் அவர்களிடம் 'திராவிடநாடு' அலுவலகத்தில் என் ஆசையைச் சொன்னேன். விளைவு, 'இதய கீதம்'!

அரங்கண்ணல் — திராவிட விடுதலைப் படையின் முரசை ஒலிப்பவர், 'திராவிடநாடு' இதழின் துணையாசிரியர். அவரை, அவர் எழுத்தை நாடு அறியும். அவரது அன்புக்கு எனது நன்றிகள்.

**தி. வி. முத்துகிருஷ்ணன்.**

# முன்னுரை

கூண்டிலே சிக்கிய கிளி, புலியைக் கண்டு மிரளும் மான், வலையில் அகப்பட்ட மீன்,—தப்பி வாழவே விரும்பும். கொடுமைகளுக்கு ஆட்பட்டு, வாழ்வில் வேதனையும் சோதனையும் நிரம்பிய, சமுதாயம் விழிப்புற்றால், தளைகளை அறுத்து தனித்து உலவவே ஆசைகொள்ளும்.

அந்த ஓயா ஆசை—அகில இந்தியா, பாரதமாதா, புண்ய பூமி என்ற 'சொல்வித்தை'களால் 'இந்தியா ஒரே நாடு' என்ற தத்துவத்தை, இன்று செல்லாக் காசாக்கிவிட்டது. மறுக்கப்பட்ட பாகிஸ்தான், தனிச் சுதந்திர நாடாக மலர்ந்துவிட்டது.

கன்னக்கோலைக் கையிலேந்தியவனின் உபசாரமும், காசுக்குத் தன்னை விற்பவளின் அன்புப் பேச்சும், 'கண்ணல்ல! நீயும் நானும் ஒருடலானோம்!' என்று பாடும் கூத்திக் கள்ளனின் சரசச் சொற்களும்—நிலைக்காதவை என்பதுமட்டுமல்ல; சுயநல வேட்டையின், சந்தர்ப்ப மொழிகள்.

இந்திய உபகண்டத்தின், ஏகச்சக்ராதிபதிகளாக விளங்கும் வடநாட்டு மூலவர்கள், இன்று அத்தகையோர்களாகவே காட்சி தருகின்றனர். அவர்கள் பேசும் அகண்ட தேசியம்—சுரண்டல் ஆசையின் விளைவு.

திராவிடம் தேய்கிறது—எல்லா வழிகளிலும், வாழ்ந்த இனம் வீழ்ந்துகிடக்கிறது, சிங்கத்தின் குகை. சிறு நரிகளின் உல்லாசக்கூடமாகிக் கிடக்கிறது.

சனுதன சர்ப்பங்கள், சந்தர்ப்ப அரசியல் வாதிகள், வடநாட்டு வணிகக் கழுகுகள், மூட நம்பிக்கை மேகங்கள்—திராவிடத்தின் எழிலை சிதைத்து சின்னபின்னமாக்கி வருகின்றன.

சுருங்கச் சொன்னுல், இன்றைய திராவிடம்–எத்தர்களின் இன்பமடமாகிக் கிடக்கிறது.

நாட்டுக்குறியவன் வதைகிறுன். பழங்குடி மகன் பதை, பதைத்துச் சாகிறுன். அவனது பழைமை பொருந்திய தாய்மொழி—'தங்க இடம்' தேடவேண்டிய பரிதாப நிலைக்கு வந்துவிட்டது.

வலியோன், எளியோனை விரட்டுவதும்—வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற நிலை வளர்வதும், தடுக்கப்படாவிடில் வாழப் பிறந்த மனித சமுதாயம் வளர்பிறையாகாது. அவர்கள் வாழ்வு 'அமாவாசை'யாகி விடும்.

திராவிட நாடு கோரிக்கை–வீண் பேச்சல்ல ; விடுதலை பெறத் துடிக்கும் இளமையுள்ளங்களின் உரிமை முரசு.

அதுபற்றிப் பேச, எழுத, ஆராய்ந்து கூற—பல 'படை'கள் திராவிட இயக்கச் சார்பிலே தினசரி நாடெங்கும் பவனி வந்துகொண்டே உள்ளன.

என் பணி—ஒருமாபெரும் சமுதாயத்தின் உரிமைக் கோரிக்கைகளை, மக்கள் முன் சமர்ப்பிப்பதாகும்.

“இதயகீதம்”—நான், அவ்வப்போது ‘திராவிட நாடு’ இதழிலே தீட்டிய ஆதாரக் கட்டுரைகளின் ‘கூடு.’

நண்பர் முத்துகிருஷ்ணன்—திராவிடபண்ணை உரிமையாளர்—திராவிட இயக்கத்தின் கீதங்களை ஒலிப்பவர், பரப்பவேண்டும் என்பதில் பேராவல் கொண்டவர்.

அவருடைய பணிக்கு என் நன்றி.

அன்பு,

**அரங்கண்ணல்.**

# புலிங்கர் மாங்தர்

"வேல் தாக்க, வேகம் தாங்காது அதோ வீழ்ந்து கிடக்கிறதே யானை, அதன் முரசத்தைத் தன் மெத்தணையாகக் கொண்டு கிடக்கிறான்! நல்ல விருந்து இன்று நமக்கென்று எக்களித்து, இரு சிறகடித்து வட்டமிட்டுக் கிடக்கும் பருந்துகளின் கூட்டம், அவனுக்கு நிழற் பந்தல் அமைத்துவிட்டது! வேழத்தின் முரசம் மெத்தை—விருந்து எனப் பறக்கும் பருந்துக்கூட்டம் அவனுக்குப் பந்தல்! வேலி எதுவும் இல்லையோ அவனைச் சுற்றி என்று எண்ணுகிறாயா—பார்! எத்தனைப் பிணங்கள் அவனைச் சுற்றிக் கிடக்கின்றன, அத்துணையும் அவனது வாளும் வேலும் கொன்று குவித்த மனித மலைகள்! அவைகள், அவனது வேலிபோலக் கிடக்கின்றன! கொக்குக் கூந்தல், குரங்கு மேனி நரை மூதாட்டியே! நன்றாகப் பார்! தெரியவில்லையா? அதோ, சிறகு அடித்து சிங்காரமாகப் போய் உட்காருகின்றனவே, கழுகுக் கூட்டங்கள்—அந்த இடத்தைப் பார்! மதயானைபோல மாண்டு கிடக்கிறான் உன் மகன்—காளையெனச் சீறி, களத்திலே

பாய்ந்து, செஞ்சோற்றுக்கடன் வெஞ்சமத்தாற்றிக், களிறு தலைமடுத்துப் பிணமாகிக் கிடக்கிறான், நீ பெற்ற மகன்!''

ஒரே மகன் — தன் குலக்கல் நாட்ட வந்த குல விளக்கு — அவனைப் பெற்றெடுத்த தாயோ நரை மூதாட்டி! களத்துக்குச் சென்ற தன் காளையைக் காணத் துடித்து வருகிறாள்—உயிருடன் தப்பினானா, வீடு வந்து சேர்வானா என்ற ஆசையோடு அல்ல! புயலெனப் பாய்ந் தானா, புலியெனக் கிழித்தானா, புகழ் மரணம் அடைந் தானா அல்லது புல்லனாகிப் போனானோ! புறமுதுகிட் டானோ என்று கண்டு தெளிந்துகொள்ளும் நோக்குடன்! தேடிப் பார்க்கிறாள்!—திண்தோள் வீரர்கள் சாய்ந்து கிடக்கும் அச்சமர்க் களத்தில். திகைக்கிறாள் — தன் மகனைக் காணாது. அப்போது, ஒருவர் காட்டுகிறார், அவளது மகன் காற்றெனச் சுழன்று பகைவரைக் கொன்று பாசறையில் உயிர் துறந்தான், மார்பிலே ஈட்டி தாங்கி—என்பதாக!

வீரம் செறிந்த இக் கவிதை ஓவியம்—தீந்தமிழின் புறநானூறு செப்பும் ஒரு சிறு துணுக்கு,

சிந்தை அயர்ந்து, வீரம் மறந்து, வீணராகிவிட்ட வீரப் பரம்பரையின் வெற்றி ஏடு—நமது பழம் பெரு மையின் பளிங்குமா மண்டபம் தரும் சிறு ஒளி!

கனியிடை ஏறிய சுளையும், காய்ச்சிய பாலிடை ஏறிய ருசியும் தரும் செந்தமிழின் சிறப்புறு காவலர்கள்

—தென்னுட்டு மக்கள்—எதிரிகளைப் போரிட்டு முறிய டிக்கும் சிந்துகளைப் பாடிக்கொண்டிருப்பது!

கேட்டாலே மயிர் சிலிர்க்கும்—கிழவனும் குமர ஞவான், தீந்தமிழ் தரும் வீரப் பண்ணெலியைக் கேட்டால்.

வேலே கை, விரலே வாள், வேழமே கவசம், வீரமே பேச்சு, வெற்றியே மூச்சு என்று விருது பாடி பாசறை யிலே கூடி, பகைவரைச்சாடி வெற்றிபெற்ருே; இன் றேல், விலாவிலே வில்தாக்க, வேல் பாய, வீழ்ந்து இறந்து போன மகனைக் கண்டும் மனங் குலையா மாதரசிகள்—மகன் மார்பிலே வேல் தைக்க இறந்தாஞ அல்லது முது கிலே வாள் தாக்க மடிந்தாஞ என்று பிணக்குவியலைப் புரட்டிப் பார்த்து பெருமூச்செறியும் வீரத் தாய்மார் விளையாடிய தண்டமிழ் நாடு இது. இன்று எலியென் ருல் கிலிகொண்டோடும் இழிநிலையிலிருக்கிறது! புலி நிகர் மாந்தர் நாம் என்று முரசு கொட்டி முத்தமிழ் வளர்த்த மூவேந்தரின் பரம்பரையினர் இன்று முது கெலும்பு ஒடிந்து, மூளைப்பலம் அற்று 'முத்தண்ணுக்க' ளாகிவிட்டனர்!

வீரம் மட்டுமல்ல, விவேகமும் காதலும் தவழ்ந்து விளையாடியது, இத்தண்டமிழ்ச் சோலையில். களிறு எறிந்து, தன் காதலியைக் கைபிடிக்கும் காளைகள், மடலேறி மணவினை நடாத்திய மாவீரர்கள் வாழ்ந்தனர்! வாழ்வில் இன்பமும் வீரமும், குதித்துக் கூத்தாடியது! குறிஞ்சியும், மருதமும், முல்லையும், நெய்தலும் காதற்

கிளிகளின் கவிதைத் தமிழ்ப் பேச்சால் களிப்படைந்து கிடந்தன—என்று அழகுபடக் கூறும் அகமும், அவர்தம் வீரஞ்சாற்றும் புறமும், இன்பத்தொகையெனும் எட்டுத் தொகையும், பாலின் சுவையெனும் பத்துப் பாட்டும், பற்றியிழுக்கும் பதினெண்கீழ்க்கணக்கும், சிலம்புச் செல்வமும், ஜீவகமணியும், மணிமேகலையும், குன்ருப் புகழும் குவலயச்சிறப்புமிக்கத் தமிழ்மொழி, இன்று தவித்திடும் தாயாகி விட்டது—கணவனையும் கண்ணென நம்பிய குழந்தைகளையும் இழந்து ஏமாந்த விதவையாகி நிற்கிறது!

வீரம் செறிந்த நாட்டில் சோர்வுப் பேச்சுகள்—வெற்றி முரசம் எதிரொலித்த தாயகத்தில் வெட்டிக் கூச்சல்கள்! வீரமண்—வீண்பூமியாகி விட்டது. விவேகம் குறைந்துவிட்டது. வாழ்ந்தவர்—வீழ்ந்துவிட்டனர்! வெற்றிக் காதைகள், பண்டைத் தமிழரின் வெஞ்சமர்ச் செய்திகள். அள்ளும் **அகம்**, துள்ளும் **புறம்** எல்லாம் மக்கள் மனத்திரையிலிருந்து மறைந்துவிட்டன!

இயலும், இசையும், கூத்தும் இந்நாட்டு மொழியின் மூன்று குழந்தைகள்! இயல் இன்பந்தரும் கற்கண்டு, இசை நெஞ்சையள்ளும் கவிதைச் சுரங்கம், கூத்து எண்ணங்களை நடித்துக் காட்டி இன்பங்கொள்வது. இது மூன்றும் அடங்கிய தமிழ்—முத்தமிழ், தமிழ் மறவரின் முரசமாயிருந்தது. இன்று முரசத்தில் ஆங்காங்கு துவாரங்கள் ஏற்பட்டுவிட்டன—தானுக அல்ல, வயதேறிய காரணத்தால் அல்ல. வஞ்சக நினைப்பும், சூழ்ச்சிச்

செயலும், சூது மதியும் கொண்டோரின் சுயநலச் சூழ்ச்சியால். முத்தமிழ் முரசத்திலிருந்து எழும்பும் வீர ஒலி, காதல் மொழி, இன்பவழி எல்லாம் கொள்ளைபோகும் நிலையில், மாற்றாந்தாய் மனப்பான்மையினர் புகுந்து விட்டனர்.

தன்னம்பிக்கை, தற்பெருமை குறித்த தருக்கு, தன் நாட்டைப்பற்றியச் செருக்கு கொண்டு வாழ்ந்த தமிழ் மரபு, இன்று தண்டு தூக்கியவனுக்கெல்லாம் தலை வணங்கும் தன்மையதாகிவிட்டது.

அல்லல் போம், வல்வினை போம், அன்னை வயிற்றிற் பிறந்த தொல்லை போம் போகாத் துயரம் போம்—நல்ல குணமதிக மாமருணைக் **கோபுரத்துள் வீற்றிருக்கும்**, கண பதியைக் கைதொழுதக்கால்—என்று 'ஏன் பிறந்தேன் ஈசா, என்னை இறக்கச் செய்வாய் விரைவில் பரமேசா' என்று பாடக்கூடிய வெறுப்புத் துறவு, வீரப் பரம்பரையினர் வாழ்வில் புகுந்து விட்டது. 'விதி! எல்லாம் அவன் செயல்! என்னால் என்செய இயலும்' என்ற தன்னம்பிக்கையைக் கொள்ளை கொள்ளும் நச்சரவங்கள், நஞ்சுக் கொள்கைகள், நம்மவர் இதயத்தில் இடம் பெற்றுவிட்டது—எப்படியோ என்று அல்ல **இன்னொரு இனத்தின்** கலாச்சாரப் படையெடுப்பும், மொழிப்போரும் தமிழைச் சிதைத்துச் சித்திர வதைக்குள்ளாக்கிவிட்டது. தாசியின் மோசப் பேச்சில் மயங்கி, தாயை இழந்த தன்மையனானான் தமிழன்—தென்னாட்டு மகன், திராவிட வீரன்!

காலைக் கதிரின் கண்கவர் காட்சி, மாலை மதியத்தின் மண்புகழ் மாட்சி, கோல மயிலின் ஒய்யார ஆட்டம்,

மேகக் கூட்டத்தின் மின்னொளி, காட்டகத்தே காணப் பெறும் களவியல் செய்திகள், நாட்டகத்தே நடை பெறும் நற்போர்க்குறிப்புகள், வேந்தரின் வேழப்படை, விளையாடு மாதரின் தத்தைப்பேச்சு, தலைவணங்காத் தமிழரின் வீர மூச்சு—இலக்கியங்களாக அமைந்த காலம் போய் இறைவன் அந்தாதியும், இராம காதையும், பக்தாமிர் தமும், பாரதக் கதையும், திருவிளையாடற் புராணமும் எழும்பலாயின. கம்பரும் கிழாரும் போன்ற பக்த சிகாமணிகள் பல்லுருவில் நடமாடலாயினர்! இயற்கையைப் பாடியவன் 'இறைவா, என் அப்பா—உன் முக்திபெற என்னம்மா செய்வேன்?' என்று அம்மையும் அப்பனும் நீயே எனப் பாடத் துவங்கினன்.

மூதின் முல்லை, வீரத் தாய்மார், நடுகல் நாட்டிய நற்குடி மக்கள், சேரன் மாட்சி, சோழ மண்டபக் காட்சி, பாண்டியன் படைப்பலம் குறித்து முழங்கப்பட்ட இசை—விசையொடிந்தது! இயற்கை வர்ணனைகள், குன்றத்தின் கோலம், நிலாவின் அழகு, அன்னத்தைத் தூதனுப்பும் காதலன் கதை குறித்து யாழொடு வீணை கலந்து இசைத்த வாணர்கள் மறைந்துபோய், மதியைச் சூறையாடும் விதியைக் குறித்து, ஏழேழ் பிறப்பைப்பற்றி 'பஜனை' செய்யும் பரமார்த்தீக சிஷ்யர்கள் கிளம்பினர்! விளைவு—இசைத்தமிழ் இன்று கோயில். கோபுரத்தைப் பற்றி, கோபாலன் கோபியருடன் குலவிய வகைகளைப் பற்றி, அனுமானின் ஆழ்வார் திருப்பெருமைபற்றி மாறி விட்டது. மகனைத்தேடி அவன் வீர மரணமடைந்தான் என்பதைக் கேட்டு மகிழ்ந்த தாயின் மாட்சி குறித்து

பாடவேண்டியவர்கள், “முருகா, முருகா, எனக்கொரு கதி தா முருகா!” என்று பாடுவதே இசை என்று எண்ணிவிட்டார்கள்!

இசையிலே—தமிழ் மணம் போய், தகாத நாற்றம் குடிகொண்டு விட்டது.

இயற்றமிழ் — இம்மை இது பொல்லாது, இந்த வாழ்வு நில்லாது, எனவே மறுமையைத் தேடீர்—அங்கு செல்லும் மார்க்கம் காண்பீர்—என்று மாறிவிட்டது. இத்தகைய எண்ணங்களைப் பரப்பும் பாகவத புராணங்களாக புது உருவு எடுத்துவிட்டது,

கூத்து—மகிழ்ச்சிப் பெருக்கால் எண்ணத்தை நடிப்பு எனும் துடிப்புச் செய்கைகளால் காட்டப்பட்டு வந்த காலம் போய், ‘ராதா கிருஷ்ண நடனம்’, நளாயினி கதை, இராமாயண நாடகம் என்று மாறிவிட்டது. முத்தமிழ்—இன்று ‘எத்தமிழ்?’ என்று கேட்கவேண்டிய நிலைக்கு வந்துவிட்டது.

> “மகா-ளா-ளா-ஸ்ரீ மு. ராகவையங்கார் அவர்களுக்கு; தற்காலத்தில் காணப்படும் சிலாசாஸனங்களாகிய இவைகளின் ஆராய்ச்சியில் தங்களுக்கு நிரதிசய மான வன்மை உளதாகத் தெரிகிறது. ஆகையால் ஆரிய தர்மத்திற்கு மாதமொரு விஷயம் அனுப்பிக் கொண்டு வரும் கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ள வேணுமென்று ஸ்ரீ மஹாஸந்நிதானத்தில் ஆஜ்ஜை யான பிரசாரம் எழுதலானது”

தமிழின் கதி இந்த உருவுக்குத் தேய்ந்து விட்டது — தேயும்படி செய்யப்பட்டது. இது தமிழராய்ச்சியி லீடுபட்டிருந்த திரு. மு. ராகவைய்யங்காருக்கு, ' காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு: ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஆஞ்ஞையிட்டருளிய ஸ்ரீ முகம் ' இது !!!

தமிழின் தனிப்பெருமை மறையச் செய்ய ' திரை மறைவில் திட்டமிட்டு வேலைகள் நடைபெற்றன — வந்தவர்க்கெல்லாம் வாரி ஈந்ததால் தமிழன் தந்நிலை கெட்டான். தன்னை உணரத் தவறினன்—திராவிட மொழியின் சிறப்பினை மறந்தான். தன்னையே பாம்பு விழுங்குமளவு நெடுந்துயில் கொண்டுவிட்டான் !

இயலும், இசையும், கூத்தும்—எல்லாம் அவனை விட்டுப் போய்க் கொண்டிருந்தன. எவரும் அவைகளை கவனிக்கவில்லை. முத்தமிழ் உருமாறியது — ஊதாரிக் கொள்கைகளால் பாவபுண்ணியம் என்ற பேச்சும், பக்தி மார்க்கம் என்ற வழியும், மோட்ச நரகம் என்ற மோசப் பாதை முதலிய தந்திர சாகசத்தால் !

கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே கீர்த்தியும் செல்வமும் பெற்றுத்திகழ்ந்தது —தென்னடு. தமிழ் நாட்டின் சார்பில் அரசியல் தூது வன் ஒருவன், ரோம் நாட்டு மாவீரன் அகஸ்டஸ் சீசருடைய ஆட்சி மன்றத்தில் அமர்ந்திருந்தானும், கட்டுக்கதையல்ல ; ரோம்நாட்டு சரித்திரம் கூறுகிறது. இந்தத் தகவலை ! எகிப்தியர், பாரசீகர், பினீஷியர்

எல்லாரும் தமிழகத்தின் பொருள்களைப் பெற்று வாணிபம் நடாத்தினர்! வீரமும் விவேகமும் கலக்கத் தரணியாண்ட மன்னுதி மன்னர்கள் வீழ்ந்தனர்—வீரம் சோரம் போயிற்று! சரித்திரச் சக்கரம் சமர்கண்டு குதித்த வெஞ்செயல் வீரர்களைச் சரணுகதிக்காளாக்கிற்று! எண்ணத்தைச் சூறையாடும் சூதுக் கொள்கைகள், தமிழர் தோட்டத்துக்குள் சதிராடத் துவங்கிவிட்டன.

“சரீரம் வேதம்; உயர்நிலை உபநிஷத்; இராமயணமும் மகாபாரதமும் இரண்டு சுவாசப்பைகள். அதன் இருதயம் மனுஸ்மிருதி. புராணங்கள் கதைகள் முதலியன அச்சரீரத்தின் எலும்புக்கூடு, ஆகமங்கள், சாஸ்திரங்கள், மந்திரங்கள், சடங்குகள்முதலியன அந்தச் சரீரத்தின் நரம்புகள், மதங்கள் கொழுப்பு ஜாதி என்பது தோல்” என்று வை. சூரிய நாராயண சாஸ்திரியார், என்னும் சரித்திராசிரியர் எழுதுகிறுர்—இங்கு ‘வந்தோரின்’ நிலை குறித்தும், அவர்களது வாழ்க்கை வகை குறித்தும் கூறும்பொழுது அவர் குறிப்பிடும் ‘சரீரம்’ தென்னுட்டுக்குள் நுழைந்தது — தேவ பாஷை பிறந்தது!

தேவர்—மனிதர், உயர்வு—தாழ்வு உருவாயிற்று! தமிழ் மகன் தாழ்ந்தான்—தமிழ்நாடு தாழ்ந்தது—தமிழன் கெட்டான்!

புதுக்கலாச்சாரம், புதுமொழி, புதுப்போதனைகள் புகுந்தன. வீரமும் வெற்றிச் சிந்தும் பாடிக்கிடந்த பரம்பரையினர், விதி என்னும் சதிக்கு ஆளாயினர்.

வைதிக வலை, அவர்களை கட்டிப்போட்டது. பாவ புண்ணியம் என்ற பாம்புகள் கடித்து வீழ்த்தின!

'புதிதாகப் புகுந்தவை'களை புனிதமானவை, புண்ணியத்தைத் தருபவை, தனதான்யாதி சம்பத்துக்களை இம்மையிலும், மோக்ஷ சாம்ராஜ்யத்தை மறுமையிலும் நல்குபவை என்ற எண்ணங்கள் பரவின—பரப்பப்பட்டன. பக்திப் போதை, தலைக்கேறிற்று — தாழ்வு மனப்பான்மை தமிழன் இதயத்தில் இடம் பெறலாயிற்று. இடறி வீழ்ந்தான்—இக்கட்டுக்கு ஆளானான், 'புனிதப் பெருமை' கொண்டவையெனக் கூறப்பட்டவைகளைப் போற்றத் தலைப்பட்டான்! தானும் புனித வழியில் நடந்து, புண்ணிய புருடனாக ஆசை கொண்டான். வாழ்வு வீழ்ந்தது—முடிகள் சாய்ந்தன! நாகரீகமும் தமிழ்ப் பண்பாடும் சிதறிச் சிதைந்தன! விழியில் கண்ணீர் தேக்கக் கூடிய கதியற்ற நிலைக்கு மொழி சீரழிந்தது!

மார்க்க போதகர்கள், மதாச்சாரியர்கள், சைவப் பெரியார்கள், வைணவ ஆழ்வார்கள், புத்த போதகர்கள், ஜைன மதக் காவலர்கள் — தமிழ் நாட்டில் உலவத் தொடங்கினர், தழைக்கவேண்டிய தமிழ்—மக்களின் மனதை மகேஸ்வரன்பால் மாற்றும் திருப்பணிக்குத் திருப்பிவிடப்பட்டது. ஒரு வாசகத்துக்கும் உருகாதாரை உருகவைக்கும் திருவாசகமும், திருப்பாவையும், இராம காதையும், இதுபோன்றவைகளும் மதப்போட்டிகளால் நிரம்பின. தமிழ் மொழியில் தழைத்தன, ஆனால்,

யாவும் வீரனை கோழையாக்கிற்றே ஒழிய, வெஞ்சமர் காளையாக்கவில்லை!

பக்திப்போதையைத்தரும் இசையாவும், மூட நம்பிக்கையைப் பரப்பும் இயலாகவும், வைதீக வியாக்கியானம் தரும் கூத்தாகவும், 'முத்தமிழ்' சிதைந்தது—சின்னா பின்னமாகியது. தமிழ்ச் சோலையில், தகாக் கருத்துகளெனும் தருக்கள் முளைத்தன, மரமாக வளர்ந்தன!

இந்நிலை வெகு வேகமாக வளர, வளங் கெட்டுப் போன மூவேந்தரின் வீழ்ச்சியும் காரணமாயிற்று அந்நியப் படையெடுப்புகள், வெளிநாட்டான் பிரவேசம், இன்னும் தீமைகளைத் திரட்டிவந்தது.

நெடுஞ்செழியனும், காரிக்கண்ணனாரும், கடும் பெருங்கோவும், செங்குட்டுவனும், இளநாகனாரும், காவற் பெண்டும், வெள்ளைப்பாடினியும் உலவிய தென்னாட்டில், ஆறுமுகனும், சுப்பிரமணியனும், கோவிந்தனும், நாராயணசாமியும், ரங்கநாதனும், ஜகதாம்பாளும், நீலாயதாக்ஷியும் உலவலாயினர்! மக்களின் பெயர்கள், ஊர்களின் பெயர்கள் மாறின.

அந்த அளவுக்குத் தாய் மொழியின் நிலை கெட்டது. நெஞ்சு துடிக்கும் வகைக்காளானது!

ஒவ்வொரு நாடுகளிலும் ஒவ்வொரு காலத்தில் மறு மலர்ச்சி பூத்திருக்கிறது. பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன, மொழியிலும், வாழ்க்கை வழியிலும், சம்பிரதாயங்களிலும், பழக்க வழக்கங்களிலும். பழைமை

என்ற மலர் வீழ, புதுமையென்ற அரும்புகள் இதழ் விரித்தன! காலத் தூதுவன், தனது நற்செய்திகளை ஆங்காங்கு தூவினுன். பகுத்தறிவு பரவியது—ஏன்? எப்படி? எதற்காக?—என்ற கேள்விக் குறிகள், கிளம்பின. அந்தக் கேள்விக் குறிகள், அந்தந்த நாட்டின் மக்கள் வாழ்வில் மகத்தான மாறுதல்களை உண்டாக்கின. விஞ்ஞானம் விளையாட, அஞ்ஞானம் விலக, ஆராய்ச்சி பெருக ஒரு புது நிலை உதயமாயிற்று.

இத்தகைய புது வாழ்வுக் காட்சி தான் இன்று தென்னுட்டில் நிலவுவது. திசை கெட்டுப் போனேம், தேன் மொழி சிதைந்து சீரழியக் கண்டோம், மாட மாளிகைகளிருந்த இடங்களிலே மண்மேடுகள்! கூட கோபுரங்கள் கோட்டான்கள் உலவும் இடமாகிவிட்டன! வாழ்ந்த பாம்பரையின் வீரத்தையும் பெருமையையும் சாற்ற, அதோ, இடிந்துபோன கோட்டை கொத்தளங்கள்—மடிந்த மாட்சியின் காட்சிகளாக நிற்கின்றன! என்று நினைத்தான்—இன்றுள்ள நிலையைக் குறித்து எண்ணினுன்—சோகம் பறந்தது, வீரம் பிறந்தது.

முடிவு—இன்று தென்னுடு மறுமலர்ச்சிச் சோலையாக மாறி வருகிறது.

தமிழ் எங்கள் தாய்! தமிழ் எங்கள் பேச்சு! என்ற சங்கொலி முழங்கிக்கொண்டே இருக்கிறது. தாய் மொழி என்றதும் இதயத்திலே ஒரு குளுகுளுப்பு. தேயும் நிலையிலிருந்து தாய் மொழியைக் காக்கவேண்டும் என்ற வீராவேசம், வேலி போட்டு வீணர்களின் தந்திரங்

களைத் தரை மட்டமாக்க வேண்டும் என்ற வெறி—இன்று இலட்சிய உருவாகிவிட்டது.

தாய்மொழிப்பற்றும், தாய் நாட்டுப்பற்றும் தென்னாட்டு இளைஞர்களின் இன்றைய இதயத்துடிப்புகள்.

இளைஞர்கள், நாட்டின் நரம்புகள். அவர்கள் எண்ணமெல்லாம் புது ஆசையில் பதிந்துவிட்டது. புது வாழ்வு காணப் புறப்பட்டுவிட்டனர். களைப்பும் கவலையும் தங்களைத் தாக்கினாலும் புன் சிரிப்புடன் அவைகளைத் தள்ளிவிட்டு, புது யுகம், காணப் புறப்பட்டுவிட்டனர்.

வீழ்ந்துபோன சமுதாயத்திலே விடிவெள்ளி உதயமாகிவிட்டது. 'அரும்பு மீசைகள்' எல்லாம் ஆர்வத்தின் சின்னங்களாகிவிட்டனர். 'இன்னொருவனின் உல்லாச சோலையாகிவிட்ட' நாட்டை மீட்டு, நல்வாழ்வு காணும் முரசொலி, இன்று முழங்காத இடமில்லை.

மாபெரும் பணியில், இறங்கிவிட்டது மறத்தமிழ் பட்டாளம். மொழியையும் வாழ்வையும், உயர்த்தப் புறப்பட்ட, அப்புலி நிகர் வீரர்கள், புது ஏகாதிபத்யம் ஒன்றையும் எதிர் நோக்கவேண்டியவர்களாகியிருக்கிறார்கள். அப்புது—ஏகாதிபத்தியம், இவர்கள் வாழ்வை, மீளா அடிமைக் குழியில் வீழ்த்தும் அளவில் கோரவாயோடு கொக்கரித்துக் கொண்டிருக்கிறது.

[illegible library stamp]

# மொழிவாரிப் பிரிவினை

" திராவிடஸ்தான், மொழிவாரி மாகாணக் கோரிக்கை போன்றது என்றால், அதனை நான் ஏற்கிறேன். ஆனால், பாகிஸ்தானைப் போலத்தனி யாட்சி, தன்னிச்சை கொண்டதாக ஆவதை நான் விரும்புவதற்கில்லை!" என்று, காங்கிரஸ் தலைவர் பட்டாபி, வெளியிட்டுள்ளார், பச்சையப்பன் கல்லூரியில் மாணவத் தோழர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் பொழுது!

மொழிவாரி மாகாணக் கோரிக்கை போன்றது என்றால் தனக்கும் சம்மதம் தான் என்கிறார், ஆனால் தன்னிச்சை நாடாக, சுதந்திர நாடாக ஆவதைத் தான் ஏற்பதற்கில்லை என்கிறார்.

இன்று, எங்கும் மொழிவாரி மாகாணப் பிரிவினை பற்றி உரத்துப் பேசப்படுகிறது. காங்கிரஸ் தலைவர்களும், மொழிவாரி மாகாணப் பிரிவினை அவசியமே, என்ற முடிவுக்கு வந்து, எப்போது பிரிப்பது, எப்படிப் பிரிப்பது என்ற யோசனையில் ஆழ்ந்திருக்கிறார்கள்.

மொழிவாரி மாகாணக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருப்போர் ஏதோ ஒரு பெரிய 'விடுதலை'யை விரும்புவதுபோலப், பேசுகின்றனர், எழுதுகின்றனர், முழக்கமிடுகின்றனர்!

அதற்குச் சிறிதும் குறையாத அளவில் காங்கிரஸ் மேலிடமும் 'ஏதோ' ஒரு மகத்தான, மாபெரும் 'சலுகை'யை மக்களுக்கு, அளிப்பதாகக் காட்டிக்கொள் கிறது, மொழிவாரி மாகாணப் பிரிவினை என்பதில் 'பிரிவினை' என்ற வார்த்தை இருக்கிறதே ஒழிய, இதனால், ஏற்படும் நலன் யாருக்கு, என்பது கூர்ந்து நோக்கின், விளங்குவதாகும்.

இன்று இந்தியா முழுமையையும் டெல்லியிலிருக் கும் மத்திய சர்க்கார் ஆண்டு வருகிறது.

மத்திய சர்க்காருக்குக் கட்டுப்பட்டவையாக மாகா ணங்கள் இருக்கின்றன. மாகாணங்கள், ஆங்கில ஆதி பத்யத்தின் அமைப்புகள்! வெள்ளையர் எடுத்தடி வைத்த காலத்தில் "இந்தியா" ஒரே தேசம் இல்லையென்பதும், அதில் சென்னை மாகாணம், பம்பாய் மாகாணம், ஐக்கிய மாகாணம் என்பதுபோல மாகாணங்கள் இல்லையென் பதும், யாவரும் அறிந்த விஷயம். ஆங்கில ஆதிபத்தியம் வளர்ந்து ஆட்சிச் சூத்திரம் அவர்கள் கைக்கு வந்தபின், நிர்வாக நலனை அனுசரித்து, மாகாணங்கள் உண்டாக்கப் பட்டன.

வெள்ளையன், வெளியேறிப்போய்விட்டான், தான் வந்தபொழுது, சிதைந்து சிக்கல்கள் நிறைந்து, குட்டி

ராஜாக்களும், குறுநில மன்னர்களும் நிறைந்து கிடந்த ஒரு பரந்த நிலப்பரப்பை, ஒரே 'தேசம்' ஆக அமைத்துக் கொடுத்துவிட்டு.

சுயராஜ்யம் வேண்டும், அந்நியர் விரட்டப்படவேண்டும் என்ற உரிமைக் கிளர்ச்சியை எழுப்பி 'இந்தியன்' என்ற வார்த்தையைக் கொண்டு, யாவரையும் ஒன்று சேர்த்து போராடியது காங்கிரஸ் கட்சி. உரிமை வேட்கையின் காரணமாக எழுந்து வளர்ந்த காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள், முன்னேடும் பிள்ளைகள், வடநாட்டவர்களாயிருந்தனர். அவர்களுடன், அந்நிய ஆதிபத்தியத்தை விரட்டும் வேகத்துடன், ஆசையுடன் யாவரும் ஒன்று திரண்டனர். பலம் காங்கிரசுக்கு வளர்ந்தது. அதோடு அதன் வட இந்தியத் தலைவர்களின் செல்வாக்கும் வளர்க்கப்பட்டது — அவர்கள் சொன்னதைக் கேட்கும் 'கிளி'களாகயிருந்தவர்களால்! எனவே, அந்நியர் வெளியேறியதும், ஆட்சிப் பீடமும், வட நாட்டார் கைக்குப் போயிற்று.

ஆட்சிப் பீடம் ஏறி பூரண இந்தியாவுக்கும் தலைவர்களாக வீற்றிருக்கின்றனர் வடநாட்டு மக்களைச் சேர்ந்தோர். எல்லாத் துறையிலும், அவர்கள் வாழ்வு, வளமுடையதாக இருக்கிறது. தென்னுட்டைச் சேர்ந்தோருக்கும், பதவிகளில் சில 'துண்டு'களும், ஆசைகளும் காட்டி, 'எல்லோரும் ஒரே நாட்டவராக' வாழ்வதாகக் காட்டிவருகின்றனர்.

இன்று இந்தியாவை ஆளும் மத்திய சர்க்கார் மாகாணங்களைப் பிரிப்பதில், மொழிவாரியாக அமைப்பதில் நாட்டம் கொண்டிருக்கிறது. பெயர், 'பிரிவினை' என்று இருக்கிறதே ஒழிய, பிரிக்கப்படும் மொழிவாரி, மாகாணங்கள் மத்திய சர்க்காருடைய கட்டுப்பாட்டில் தான் இருக்கும். இன்னும் கூறவேண்டுமானுல், இப்போதுள்ள நிர்வாகத் தொல்லை, மாகாணங்கள் பிரிக்கப்பட்டு விட்டால், மத்திய சர்க்காருக்குப் பெரிய அளவில் குறைந்துவிடும். பெரிய மாகாணங்களைக் கண்காணிப்பதில் இருக்கும் கஷ்டம், மத்திய சர்க்காருக்குக் குறைந்து விடும்.

ஒரு ஜில்லா முழுமைக்கும் ஒரே கலெக்டர் இருந்து ஆளுவதற்குப் பதில், அந்த ஜில்லாவை பல தாலுக்காக் களாகப் பிரித்து, அந்தந்தத் தாலுகாவையும் ஒரு தாசில் தார் பொறுப்பில் விட்டு, தாசில்தார்கள் வேலையைச் சரிவரச் செய்கிருர்களா, என்று கலெக்டர் மேற்பார்வையில் வைத்தால், கலெக்டருக்கு முன்னிருந்த நிர்வாகக் கஷ்டம், முன்பைவிடக் குறைந்து விடுகிறதல்லவா! அதுபோலத்தான் இந்த மொழிவாரி மாகாணப் பிரிவினை என்பதும். இதனுல், மத்திய சர்க்காருக்கு நன்மை தானே ஒழிய, சங்கடம் எதுவும் கிடையாது. சென்னை போன்ற பெரிய மாகாணத்தை, தன் பார்வையில் வைத்துக்கொண்டு, பொறுப்பு அதிகமாக இருக்கவே, அதை மூன்று அல்லது நான்கு மாகாணங்களாகப் பிரித்து, அவைகளைத் தனித்தனியான நிர்வாகத்தில் விட்டால், சங்கடம் குறையுமல்லவா! பெரிய இடத்தை, கைக்குள்

வைத்திருப்பதிலேற்படும் சங்கடம், சிறிய சிறிய இடங்களை நிர்வகிப்பதில் ஏற்படாதல்லவா!

இந்த 'தந்திரமான ஏற்பாடுதான்' மொழிவாரி மாகாணப் பிரிவினை என்று பேசப்படுவதும், மத்திய சர்க்காரே இதில் முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதும்! இப்படி மொழிவாரியாகப் பிரிக்கப்படுவதால், திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாம், கூறிவரும் இலட்சியங்கள் ஈடேறிவிட முடியாது. முன்பு "தமிழ் நாடு தமிழருக்கே" என்று நாம் முரசொலித்தோமே, அந்த முழக்கத்திற்கும், இப்போது கூறப்படும் தமிழ் நாடு பிரிவினைக்கும், மலைக்கும் மடுவுக்குமுள்ள, வித்தியாசம் உண்டு.

"திராவிட நாடு" கோரும் நம்முடைய இருதய கீதமே வடநாட்டு ஆதிபத்தியத்திலிருந்து விலகி, சுரண்டு தலுக்காளாகி நிற்கும் ஒரு சமுதாயம் தனக்கென ஒரு தனியாட்சி அமைத்து வாழவேண்டும் என்பது தான். இதற்கான காரணங்களை, எண்ணமுடியாத அளவில் நாம் இதுவரை கூறிவந்துள்ளோம்.

பக்கத்திலே உள்ள பர்மா, தெற்கே கிடக்கும் சிறு தீவு இலங்கை போன்றவை யெல்லாம் தனியரசு நிறுவி, தாங்களாகவே ஆட்சி நடத்தும்பொழுது எல்லாத் துறைகளிலும் வசதியும் வளமும் நிரம்பிய பழந்தமிழ்ச் சமுதாயம், தனக்கென ஒரு நாடமைத்து, தன் வாழ்க்கையை ஏன் நடத்த இயலாது என்ற உரிமை ஒலியே நம் பிரிவினை முழக்கமாகும்!

தனியாட்சியின் தன்மையையும், அது எப்படியிருக்கும் என்பதையும் நாம் எடுத்துச் சொல்லியே வருகிறோம். திராவிட நாடு திராவிடருக்கு ஆகவேண்டுமென நாம் கேட்கிறோமென்றால், அதன் பொருள் வடவருடன் வம்புக்கு போகிறோமென்றோ, வெறியைக் கிளப்பி அதன்மீது வாழ நினைக்கிறோமென்றோ அர்த்தமல்ல. வடநாட்டுக்கு இங்கு வசூலாகும் பணத்தை வரியாகக் கட்டிவிட்டு வாடியுழலும் கடன்காரன போலக் கைகட்டிக்கொண்டு நிற்கும் நிலைமையைப் போக்கி, இங்கு வழியும் இயற்கை வளங்களைக் கொண்டு மக்கள் உழைப்பையும் விஞ்ஞானத்தையும் மூலதனமாகக் கொண்டு வாழ்வது என்பதே பொருள். திராவிடத்தின் அரசிலே, அவர்கள் வாழ்விலே, பொருளியல் வளத்திலே, யாருடைய தலையீடும் மேற்பார்வையும் கூடாதென்பதே நம் இலட்சியத்தின் 'இருதய' கீதம்! இன்றோ, எதற்கெடுத்தாலும் நாம், மத்திய சர்க்காரை நோக்கிப் பிச்சை கேட்கும் பரிதாப நிலையில் கிடக்கிறோம். இந்நிலை நீங்கி, நாம் வாழவேண்டுமென்பதே நம் ஆசை.

பகை கிளப்பவோ, வெறுத்து வாழவோ அல்ல நம்முடைய கோரிக்கை. தற்போது வடவருக்கும் நமக்கும் நீடிக்கும் போலி நேசம், வற்புறுத்தல்மேல் வாழும் நிலை நீங்கட்டும். நாமும், அவர்களும் 'நண்பர்களாக' வாழ்வோம் என்பதே நம்முடைய விருப்பமும், வேண்டுதலுமாகும், இதைப் பன்முறை கூறிவிட்டோம் — இன்றும் கூறுகிறோம்.

திராவிட நாடு தனித்தியங்கும் என்ருல், இந்திய பூபாகத்துடன் 'வெட்டொன்று துண்டிரண்டாக' ஆகி, அப்படியே அரபிக்கடலுக்கும் வங்காளாகுடாக்கடலுக்கு மிடையே ஒரு அகலக் கால்வாய் வெட்டி, பிரிந்துபோய் நிற்பதல்ல. நமக்கென ஒரு நாடு அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதுதான். வெளி நாட்டாரின் ஆபத்து இந்திய பூபாகத்துக்கு ஏற்பட்டால், தனித்துப் பிரிந்த திராவிடம், தனியாக நின்றுவிடாது. ஆபத்து ஏற்பட்டு, தாக்குதல் விளைந்தால் அருகில் 'இந்துஸ்தான்' இருக்கிறதே, அதற்குத்தானே ஆபத்து என்று 'திராவிடம்' சும்மா இருக்காது, ஒன்றுநின்று, கைகோர்த்து வெளிப் பகையை ஓட்டும். நாட்டைப் பிரித்துக்கொண்டால், தொடர்பு எல்லாவற்றையும் துண்டித்துக்கொண்டு போய்விடாது என்பதையும் விளக்கி வருகிருேம். நேசம் நிலைக்கவும், வளரவும், அதற்கான ஒப்பந்தம் செய்து கொள்வோம், பிரிந்து நின்று, வாழ்வோம் என்று கூறுகிருேம். நட்பு நிலவட்டும், நாச நினைப்பு ஒழியட்டும், இரண்டு குடும்பங்களாக வாழ்வோம், ஒரே குடும்பமாக இருந்துகொண்டு, இரண்டு 'வேறு' இனங்கள் உறுமிக் கொண்டும் வேதனையி வீடுபட்டுக் கொண்டும் போக வேண்டாம், இதற்கு ஒரு முடிவு ஏற்படட்டும் என்று கூறி வருகிருேம்.

* * *

தனிநாடு வேண்டுமென நாம் கருதுவதில், கோருவதில், அரசியல், அறிவியல், பொருளியல், துறைகளில் பிற்போக்கில் கிடந்து உழல்கிருேம் என்பதுமட்டுமல்ல,

பழம்பெருமையும், இருக்கிறது. எப்போதும் நாம், இன்று இருப்பது போல ஒரு பரந்த உபகண்டத்துடன் இணைந்து, அல்லலில் அகப்பட்டு வாடியவர்களல்ல.

முன்பு, ஒரு தனி நாடாகவே இருந்தோம் — வாழ்ந்தோம்! வெள்ளையர் இட்ட தீ நம்மீது பரவுமுன், இங்கு எந்த வட நாட்டு ஆதிபத்திய அரசும் நம்மை அடிமைப் படுத்தியதில்லை! குப்தர்கள் ஆட்சியில் தானுகட்டும், மௌரிய சாம்ராஜ்யத்தில்தானுகட்டும், மொகலாய அரசில் தானுகட்டும், இவை எவையும் திராவிடத்தின் தன்னுட்சியைத் தகர்த்ததில்லை; கேடு சூழ்ந்ததில்லை, அதற்குப் பதில் இமயமீது நமது சேரன் 'விற்கொடி' நாட்டினுன், சோழ மன்னன் பர்மாவில் பவனிவந்தான், கரிகாலன், சிங்கப்பூர்வரை சென்ருன், என்றெல்லாம் நமது இலக்கியங்கள் நம் புகழைக் கூறுகின்றன. இத்தகைய வீரமும் தீரமும் விளையாண்ட இடம் நமது நாடு! இடிந்துபோன கோட்டை கொத்தளங்கள் இதோ, நம் கண்முன்னர், மடிந்துபோன மன்னுதி மன்னர்களின் வீரதீரத்தைப் பாடம் சொல்லிக்கொடுக்கின்றன! தரணியாண்ட தண்டமிழ் மகனே, ஏன் இன்று இக்கதிக்கு ஆளானுய், என்று நம் பண்டைப் பெருமை, நம்மைப் பரிகசிக்கிறது! இதயத்தைக் குலுக்கிவிடுகிறது!

அதுமட்டுமல்ல, இழிநிலையில் கிடக்கும் நம் கண்முன்னே, இன்று உலக நாடுகள் ஓடிவருகின்றன. அவைகளைக் காணும்பொழுது, நம் ஆவல் பன்மடங்காகிறது. ஸ்பெயின் போர்ச்சுகல்! அயர்லாந்து—அதற்குள்ளும்

ஒரு தனியரசு! ஸ்வீடன், நார்வே! சிறு நாடு இத்தாலி! துருக்கி—பழைய உதுமானிய சாம்ராஜ்யத்தின் துண்டு. இன்று அ.து தனி நாடு!

இவைகளைக் காணும்பொழுது வாழ்விழந்துகிடக்கும் நமக்கு ஆசை ஏன் தோன்றுது; வாழ வசதியிருந்தும் அதை மாற்றானுக்கு அளித்துவிட்டு மண்டியிட்டுப் பிச்சைக் கேட்கும் நிலை நீடித்தால் இதயம் ஏன் குமுறுது!

*　　*　　*

திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும், என்ற உரிமை முழக்கம் தனக்குப் பிடிக்காது என்கிறார் பட்டாபி! தனி மாகாணம் என்று கூறிக்கொண்டு, வடவர் பிடியில் அடங்கிக் கிடப்பதைத்தான் விரும்புவாரா அவர்!

சர்க்கரை வேண்டுமா என்று கேட்டானும், ஒருவன், சர்க்கரைக்கு திண்டாடித் தெருவில் நிற்பவனை 'ஆமாம், எங்கே' என்றானும் கேட்டவன் 'இந்தா, இக் காகிதத்தில் எழுத்தாக இருக்கிறது எடுத்துக்கொள்' என்று கூறினானும் எத்தன்! அதைப்போல இருக்கிறது, பிரிவினை என்பது உண்டு, ஆனால் 'பிரிந்து வாழ்வது' கிடையாது என்ற கூற்று! அவருக்குப் பிடிக்காததுதான் தனி நாடாக நாம் ஆகவேண்டுமென்பது—இப்போது. ஆனால், உரிமைச் கிளர்ச்சி ஒரு உதட்டுச் சொல் அல்லவே! அதிலும் நம் உரிமை முரசு, நம் இதயத்திலிருந்து எழும்பும் இலட்சிய கீதம்! இது, சீறியெழும் புயல்! இதைத் தடுக்க நினைக்கலாம்—ஆனால் முடியாது!

# புது அரசியல்

ஜனவரி 26–இந்தியப் புது அரசியல் ஆரம்பமாகி விட்டது. சர்க்கார் கட்டிடங்களில், பொது இடங்களில், தீபாலங்காரமும், அரசாங்க ஆடம்பரமும் அன்று நடைபெற்றுள்ளன—ஆனால், மக்கள் மன்றத்திலே மகிழ்ச்சியில்லை! 'குடியரசு' ஆரம்பமாகிவிட்டது என்ற எண்ணங்கூட இல்லை, அது பற்றிய சிறப்புப் பேச்சுகள் இல்லை, 1947 ஆகஸ்டு 15 அன்று இருந்த சிறிதளவு உணர்வு கூட இல்லை! இந்நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும், இந்த அரசியலமைப்பு மீது, அதிருப்தியைத் தெரிவித்துள்ளன—ஒரு கட்சியாவது இத்திட்டத்தை ஏற்கவில்லை!

காரணம், புது அரசியலமைப்பு, ஒரு முதலாளித்துவச் சிருஷ்டி, பிற்போக்கின் படைப்பு, வடநாட்டு ஆதிக்கத்தின் சுரண்டல் இயந்திரம், டெல்லிக்கு மணிமுடி சூட்டும் திட்டம்!

மகாணங்களின் உரிமைகள், வருமான இனங்கள், வளம்பெறும் வழிகள், சுதந்திர நிலை கொள்ளைபோய் விட்டன.

நமது கையிலே இருந்த மாடப்புரு, பருந்தால் விரட்டப்பட்டு விட்டது; சுதந்திர உரிமைகள், பறி போய் விட்டன.

புரு கோபுரக் கோடியில்; கீழே நாம்! அண்ணாந்து பார்க்கிறோம், அருமைப் புரு பறிபோய் விட்டதே என்ற துயரம் தோய்ந்த முகத்துடன். வானமளாவி நிற்கும் கோபுரம், ஏறமுடியாததாகத் தெரிகிறது. ஏக்கமும் இதய வேதனையும் நமக்கு ஏற்படுகிறது.

புதிய அரசியலமைப்பை எண்ணிப் பார்க்கையில் ஆகாயமளாவி நிற்கும் கோபுரந்தான் நினைவுக்கு வருகிறது. புரு கோபுரத்தில், கீழே நாம்! எனினும் நமது புருவை நாம் பெற்றுத்தான் ஆகவேண்டும், பெறாமல் முடியாது. மாடப்புருவைப் பெற, கோபுரத்தின் மீது ஏறவேண்டும். ஏறவோ, நம்மால் இயலாது, ஏனெனில் கால்கள் இரண்டும் கட்டப்பட்டிருக்கின்றன—சட்டம் என்ற கயற்றால்! எனினும் நாம் ஏறி, நமது புருவைத் திரும்பப் பெறத்தான் வேண்டும். 'எடுத்தடி வைக்க இயலாதபோது அதற்கான வழி வகைகள் இல்லாத போது, ஏறிச்செல்லும் வாயிலும் சாத்தியிருக்கும்போது எப்படி ஏறமுடியும் என்ற சஞ்சலமும் சந்தேகமும் எழும்புகின்றன! உண்மை—எனினும் நாம் நமது இலட்சியத்தைப் பெற்றுத்தான் தீரவேண்டும்—இதில் எந்தவித இன்னல் எதிர்நோக்கினும், அவைகளைத் தாங்கி, தாண்டிச் செல்லவேண்டும். கோபுரத்தின் படிக்கட்டுகளில் ஏறி, நடக்கமுடியாவிட்டால் மார்புகளால் ஊர்ந்து

சென்று, நமது மாடப்புருவை—சுதந்திர உரிமையை—நாம் பெறுவோம், என்பதிலே திடமான நம்பிக்கையும் உறுதியும் நமது இதயத்தில் இருக்கிறது.

புது அரசியலமைப்பு நமக்குப் பிடிக்கவில்லை ; ஜயப் பிரகாஷ், சரத்சந்திர போஸ் போன்ற முற்போக்கு எண்ணங் கொண்டவர்களும், இதே கருத்தை வெளி யிட்டுள்ளனர். 'எங்களது கட்சி, அதிகாரம் பெற்றால் இந்த அரசியலமைப்பை அகற்றுவோம்' என்றும் அவர் கள் முழக்கமிட்டிருக்கின்றனர்.

ஏக கட்சியால், தன்னிஷ்டத்திற்கேற்ப உருவாகி இருக்கும் அரசியல் திட்டம், நமக்கு ஓர் அடிமை சாசனம் ; நம் நாட்டு வாழ்வைச் சூறையாடும் சூது வலை! இதிலே எந்தவித எண்ணபேதமும் இல்லை—இதுபோல வே இந்நாட்டு முன்னணிக்கட்சிகள் இந்த அரசியல மைப்புபற்றி தங்களது கண்டன அலைகளைத் தெரிவித் திருக்கின்றன.

ஆனால் கண்டனமும், அதிருப்தியும் காலங்கடந்த தாகிவிட்டது. அரசியலமைப்பைத் தயார் செய்து முடிப்பதற்குள் மூன்று ஆண்டுகள், முப்பத்தைந்து மாதங்கள், இருந்தன. இந்த இடைக்காலத்தை இந் நாட்டு முற்போக்குக் கட்சிகளான சோஷலிஸ்டுக் கட்சி, போஸ் கட்சி, கம்யூனிஸ்டுக் கட்சி ஆகிய எல்லாக் கட்சி களும் வீணாக்கி விட்டன. ஐக்கிய முன்னணியுடன் அரசியலமைப்பு பற்றிய அதிருப்தியை, ஒழுங்கான ரீதி யில் எழுப்பவில்லை, இந்த வேதனை நிலைக்கு நாமும் உள்ளாகியிருக்கிறோம்.

நமது கண்டனத்தை, அதிருப்தியை, ஆத்திரத்தைத் தெரிவிக்க, திரட்டிக்காட்ட நாமும் தவறி விட்டோம்!

ரயில் போய்விட்டது! தவறினோம், அதோ வேக மாக நம்மைத் தாண்டிப் போய்க் கொண்டிருக்கிறது!

ஏன், எப்படி எக்காரணத்தால் என்பது அல்ல பிரச்னே. காரணம், விளக்கப் புகுந்தால் வேதனையும் சோகமுமே வெளிவரும், தக்க பதில் கிடைக்காது, கூற முடியாது என்பதால்.

ரயில் போய்விட்டது; இந்திய உபகண்டத்தின் அரசியலமைப்பு தயார் செய்யப்பட்டு நம்மை ஆளத் துவங்கிவிட்டது. இடியும் மின்னலும், நம்மை எதிர் நோக்கிவிட்டன; இன்னலும், துன்பமும் நம்மை நெருங்கிப் பிடித்துக்கொண்டு விட்டன. காங்கிரஸ் ஆட்சி தயாரித்த, சுயநல சுகபோகச் சட்ட திட்டங்கள் நம்மீது திணிக்கப்பட்டு விட்டன. நாம் அடிமைப் படுத்தப்பட்டு விட்டோம், நமது கால்களிலே விலங்கு, கைகளிலே கட்டுகள், வாழ்க்கைச் சுதந்திரத்திலே சூறுவளி — ஆரம்பமாகிவிட்டது!

இந்திய துணேகண்டம்—குடியரசு நாடெனப் பிரகடனப் படுத்தப்பட்டு விட்டது. ஜனவரி 26—விழா, வேடிக்கை, விருந்து, பேச்சு ஆகியவைகளுடன் இந்திய வரலாற்றில் ஒரு இடம் பெற்றுவிட்டது. அந்நாள், காங்கிரஸ் ஆட்சியாளரின் இன்பநாள்; முதலாளித்துவத்தின் 'முத்திரை' மக்கள் வாழ்வில் பொறிக்கப்பட்ட

தினம்; நமது நாட்டுக்கு தீமையும் தீதும் பயக்கக்கூடிய தேதி!

புதிய அரசியலமைப்பு மூலம், புதுச் சட்டதிட்டங்கள், புது ஏற்பாடுகள் இம்மாபெரும் துணைக்கண்டத்தை, ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாடுகள் என்று கூறத்தக்க அளவு பரந்து விரிந்து கிடக்கும் ஒன்பது மாகாணங்களை, முப்பதுகோடி மக்களை ஆளத் துவங்கி விட்டன.

துணைக்கண்டம் — என்று அழைக்கப்படும் இம் மாபெரும் பூபாகம் ஒரே ஆட்சி நிர்வாகத்துக்கு உள்ளாக்கப்பட்டுவிட்டது, ஒரே நாடு, என்ற போலிப் பூவேலை, பெருமை மூலாம் பூசப்பட்டு.

எண்ணம், வாழ்க்கைமுறை, மொழி, பண்பாடு, பழக்க வழக்கம், கலாச்சாரம் ஆகிய துறைகளில் பல் வேறு வகையினர் வாழும் இப்பரந்த உபகண்டம், குடியரசு, என்று கூறப்பட்டு, தலைவர் என்ற ஒரு நபரின் ஆட்சிக்குரிய நாடு என அறிவிக்கப்பட்டுவிட்டது, அதற்கான சட்டதிட்டங்கள் தரும் அரசியலமைப்பு ஒன்றை ஆக்கிக்கொண்டு. அதன்படி பிரகடனம் செய்யப்பட்டு விட்டது.

ஹர்ஷன், கனிஷ்கர், அக்பர், அசோகர், சந்திர குப்தர், அவுரங்கசீப், ஆகிய மன்னாதி மன்னர்கள் காலத்திலும், எட்டிப் பிடிக்க முடியாததாக இருந்த, **நம் நாடு** டெல்லி மகுடத்திற்கு என்றும் அடிபணியும் நிலை உண்டாக்கப்பட்டு விட்டது.

இருநூறு ஆண்டுகள், இந்நாட்டைச் சுரண்டி வாழ்ந்த ஆங்கிலேய ஆதிபத்தியம், வெளியேறிய இரண்டரை ஆண்டுகளில் தன் ஆட்சி ஆதிக்கம், சுரண்டல் வேலை நீடிக்க வழி வகை செய்துகொண்டு விட்டது. வடநாட்டு ஆதிபத்தியம் எல்லோரையும் கட்டுப்படுத்தும் அரசியலமைப்பை வகுத்துக்கொண்டு நம்மை ஆளத் துவங்கிவிட்டது.

வேதனை ! வேதனை !! வேதனை !!! நம்மை இடிக்கிறது. கலங்க வைக்கிறது. ஆனால் இத்தனையும் நாம் எதிர்பாராதது அல்ல ; எதிர்பார்த்தோம், எனினும் ஏமாந்தோம் !

1947—ஆகஸ்டு பதினைந்து ஏற்படுமுன் அதாவது இந்தியாவைவிட்டு வெள்ளையர் வெளியேறு முன் நடந்த சம்பவங்கள் பலப்பல. கிரிப்ஸ் தூது–பிரிட்டிஷ் மந்திரி சபைக் குழுவினர் தூது—வேவல் பேச்சு வார்த்தை எல்லாம் நடந்தது, அதன் பின்னரே 'ஆகஸ்டு 15' வந்தது.

வெள்ளையர் இந்நாட்டை விட்டு வெளியேறுவது எப்படி, எம்முறையில், என்பது பற்றிய விவாதங்களுக்குப்பின், ஏற்பட்ட முடிவின் விளைவாகவே "சுதந்திரம்" இந்தியத் துணைக்கண்டத்துக்குக் கிடைத்தது. இந்தியத் துணைக்கண்டத்தை விட்டு, வெளியேற, சுதந்திர முன்னணியிலிருந்த காங்கிரஸ்—லீக் கட்சியினருடன் பேசி ஒரு ஏற்பாடு செய்துகொண்டனர். அந்த ஒப்பந்தத்தின் விளைவாகவே, சுதந்திரமும், அதன் காரணமாக அரசியல்

நிர்ணய சபையும் ஏற்பட்டது. அந்த அரசியல் நிர்ணய சபை இந்தியாவின் அரசியலைத்தயார் செய்து தந்துள் ளது.

இந்த ஏற்பாடு நடைபெற்ற காலத்தில், பிரிட்டிஷ்—காங்கிரஸ் பேச்சு வார்த்தைகள் நடந்த வேளையின் முடிவாக, அதிகார மாற்றம் ஏற்பட்டது, சுதந்தரப் போரின் முன்னணியிலிருந்த காங்கிரஸ் ஆட்சிப்பீடம் ஏற்றது. அதையொட்டி, அரசியலைத் தயாரிக்கவேண்டிய பொறுப்பையும் மேற்கொண்டு, தனக்குப் பிடித்த நிபுணர்களை, தன் சொல்லுக்குத் தலையாட்டும் நபர்களை நியமித்துக்கொண்டு, புது அரசியலைத் தயாரித்து விட்டது.

நாட்டுச் சுதந்தர வாழ்வுக்குப் போராடிய காங்கிரஸ் கட்சியின், முன்னணித் தலைவர்களாக இருந்ததும், இருப்பதும், வடநாட்டினராகவே இருப்பதால், எல்லா வகையிலும், அதிகாரமும் ஆட்சிப் பொறுப்பும் தங்கள் கையிலேயே இருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் 'டெல்லி ஆதிபத்தியத்தை' சிருஷ்டித்துக்கொண்டு விட்டனர். இந்தியா குடியரசு நாடு என்று பிரகடனம் செய்துவிட்டனர். அதிகாரங்களையும், பொறுப்பையும் தங்கள் வசம் குவித்துக்கொண்டு விட்டனர்.

இந்த ஏற்பாடுகள் நடந்தபோதும், அதிகாரங்கள் குவிக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றவேளையிலும் நமது ஆசையும் எண்ணமும் எதிரொலிக்கும்படி

நாம் செய்யவில்லை. மக்கள் மன்றத்தில், நமது குரல் ஒலித்தது உண்மை, ஆனால், நம்மை ஆட்டிப்படைக்கும் சக்தி உருவாகிக்கொண்டிருப்பதை உணர்த்தினமே யொழிய, அதைத் தடுக்க வழிசெய்யவில்லை. மூன்று ஆண்டுகள் இப்புது அரசியலமைப்பு ஏற்படுவதற்குள் இடைவேளை இருந்தது. இந்த இடைக்காலத்தில் நாம் தவறிவிட்டோம்; புது அரசியல்—நம்மை விழுங்கும் முதலை—உருவாகிவிட்டது!

இந்தத் தவறு—திராவிட முன்னேற்றக் கழகமாக இப்போது உருவாகி வளர்ந்து நிற்கும்—நமக்கு இன்று நன்றாகத் தெரிகிறது.

வெள்ளம் நம்மை இழுத்துக்கொண்டுபோக ஆரம் பித்துவிட்டது, உடைப்பு எடுக்குமுன் நாம் அடைக் காததால், எடுத்த பின்னரும் எச்சரிக்கை செய்து தடுக் காததால்!

இது ஏன்?—இக்கேள்விக்கு கிடைக்கக் கூடிய பதிலை நாம் விளக்க விரும்பவில்லை; வேதனை வீணையை மீட்டு வதால் அபஸ்வரம் தான் மீண்டும் எழும்புமேயொழிய ஆபத்தைப் போக்கும் வழியோ, வகையோ, தென்படாது என்பதால்!

ரயில் போய்விட்டது; சென்ற திக்கை நினைத்து ஏங்கி பயனில்லை. இனி அடுத்த சந்தர்ப்பம் வரும் வரை, காத்திருக்கத்தான் வேண்டும்,

அரசியலமைப்பு நம் மீது திணிக்கப்பட்ட நாளான ஜனவரி 26 ஐ நாம் நமது அதிருப்திக்குரிய நாள் என

அறிவித்திருக்கிறோம். அன்று நடைபெற்ற கொண்டாட்டங்களிலே, நமக்கு மகிழ்ச்சியில்லை, மனவேதனை தான் இருந்தது.

நம்மை அடிமைப்படுத்தும் இந்த அரசியலமைப்பை நாம் கண்டிக்கிறோம், இந்த அரசியலமைப்பு மாற்றப் பட்டால்தான் நம் மனக்குறை தீரும்—அவசியம் மாற்றப் பட்டுத்தான் ஆகவேண்டும், அதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபடத் தயக்கமோ, தவக்கமோகொள்வதற்கில்லை.

அதேவேளையில், நமது எண்ணத்தைச் சாதிக்க, நமது இலட்சியத்தை அடைய, சட்டவிரோதம் என்கிற பாதையிலே நடக்க நாம் விரும்பவில்லை. பலாத்காரம், சதி, சூழ்மதி இவை நமக்கு பிடிக்காத செயல்கள். குழப்பத்தையும், கலவரத்தையும் ஏற்படுத்தி நாட்டின் நல்வாழ்வைச் சீர்குலைத்து, இலட்சியத்தை அடையமுனை வதால் நாட்டு வாழ்வு சீர்குலையுமே தவிர, நமது எண்ணம் விரைவில் வெற்றிபெற வழியேற்படாது.

எனவே, நமது இலட்சியத்தைக் காண, சுதந்திரத் தைப் பெற நாம் நடத்தும் போராட்டம்—அறப்போர்—நேர்மையையும், சட்ட வரம்பைத் தாண்டாமல், நேர்மை யுடன் இருக்கும். நமது கோரிக்கைகளைக் கூறும்போது ஆளவந்தாரின் அடக்குமுறை அதிகமாகலாம்; பயம் இல்லை நமக்கு அதை ஏற்கச்சித்தமாக இருக்கிறோம்! சீற்றமும், சித்திரவதையும் அதிகரிக்கலாம்; அதனால் அறி ஆபத்துக் குழியில் விழுந்துவிடமாட்டோம்;

நேர்மை என்கிற பாதை, கடமை என்கிற விளக்கு, அமைதி என்கிற ஊன்றுக்கோல்கொண்டு இருட்டு மயமாக்கப்பட்டிருக்கும் நமது இலட்சியப் புரியை நோக்கி, நாம் எப்போதும் போல இன்னும் வேகமாக முன்னேறியே செல்வோம். யார் தடுத்தாலும், எவர் முட்டுக்கட்டை யிட்டாலும், நமது பயணத்தைத் தடுத்து விடமுடியாது.

முன்பு—பல ஆண்டுகளுக்கு முன்னர்—வங்கத்தைத் துண்டாக்கிற்று இரண்டாக, பிரிட்டிஷ் ஆதிபத்தியம் அதுகண்டு, வங்கத்தார், குமுறினர் எதிர்ப்பியக்கம் நடத்தினர் 'அடாது, இது' என்றனர் "ஆகா! ஒற்றுமையைச் சிர்குலைப்பதா" என்று ஓங்காரக் கூச்சல் எழுப்பினர்— வெள்ளை ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சி என்று கூறினர்! ஆர்ப்பரிப்பு, கொதிப்பு, ஆத்திரக் கூச்சல்கண்ட ஆங்கில ஆட்சி அப்போது, மார்தட்டித்தான் பேசிற்று. சட்டம் செய்துவிட்டோம், அதை மீண்டும் ரத்துசெய்வதென்பது எங்கள் அகராதியில் இல்லை, இட்டது இட்டதுதான் என்று கர்வத்துடன் பதில் தந்தனர்!

ஆனல் கர்வம் நீடிக்கவில்லை—மக்கள் எதிர்ப்பு மண்டியிடச் செய்தது. சட்டத்தை மீண்டும் மாற்றும் படிச் செய்தது. துண்டுபோடப்பட்ட வங்கம் ஒரே வங்கமாக ஆக்கப்பட்டு.

"ஆகஸ்டு 15" வரை, ஒரே மாகாணமாக இருந்து, பின் பாகிஸ்தானுக்குப் பாதியும், இந்துஸ்தானுக்கு மீதியும் என்று ஆயிற்று!

சட்டம், சாசுவதமானதல்ல. அதிகார பீடத்திலிருப் போரால், மமதை, மண்டைக் கர்வம் காரணமாகப் பேசப்படலாம் 'போட்டால் போட்டதுதான்' என்று! ஆனால் அந்தப் பேச்சை மக்களின் இதயக் குமுறல் மாற்றிவிடும், மக்கள் சக்தி முன் மமதையும் கர்வமும் பொடிப்பொடியாகிவிடும்.

இதை வங்காளத்தின், பழைய செய்தி நமக்குத் தெரிவிப்பதாகும். முதலில் அந்நிய ஆட்சி துண்டாடும் படிச் சட்டம் போட்டது. பின் ஒன்றுகும்படி, அதை மாற்றிச் சட்டம் செய்தது. அதற்குப் பின் பல ஆண்டு கள் கழித்து, மீண்டும் துண்டாடச் செய்து இரண்டு நாடுகளாக்கி இன்னொரு சட்டம் இயற்றவேண்டி நேரிட்டது.

எனவே, இன்றைய அரசியல் சட்டம், இன்று நம் மீது திணிக்கப்பட்டிருந்தாலும், சட்டம் செய்தாகிவிட் டது என்ற சந்தோஷத்தை, ஆதிபத்தியக்காரர்களின் இதயத்தில் எழுப்பியிருந்தாலும்—என்றுவது ஓர்நாள் மாற்றப்பட்டுத்தான் தீரும், மாற்ற நேரிடும் என்பதில் ஐயமில்லை.

## வெற்றி நமதே,

அஸ்ஸாமிலே ஆத்திரம், வங்கத்திலே வம்பு, பஞ்சா பிலே கிளர்ச்சி, சென்னையிலே குமுறல் — இத்தனை 'வரவேற்பு'களுடன் இப் புது அரசியல் உதயமாகி யிருக்கிறது.

புது அரசியல் மூலம், மாகாணங்களுடைய அதிகாரங்கள் "டெல்லி"யில் கொண்டுபோய்க் குவிக்கப்பட்டிருப்பது—ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ளவர்களை ஆத்திரமயமாக ஆக்கியிருக்கிறது. மாகாணத்துக்கு கிடைக்கக்கூடிய வருமான இனங்கள், மத்திய சர்க்காருக்குக் கொண்டுபோகப் பட்டிருக்கின்றன. குடியரசின் தலைவராக வருபவர், நினைத்தபோது, மாகாணங்களின் நிர்வாக அதிகாரத்தில் தலையிடும் அளவுக்கு மாகாணத்தின் சுதந்திரம் பறிபோயிருக்கிறது. மாகாணங்கள்—மத்திய சர்க்கார் இரண்டு இடத்திலும், ஆட்சி மேடையில் அமர்ந்திருப்பவர்கள் ஒரே கட்சியினர்—காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்றாலும், இரண்டு இடத்துக்குமிடையே சச்சரவும், குமுறலும் ஏற்பட்டுவிட்டன; வளர்ந்துகொண்டிருக்கின்றன.

கோபால் ரெட்டி முதல் கோபிசந்த் பர்கவா வரையில் குமுறும் எரிமலையாகத்தானிருக்கின்றனர். இந்த நிலை ஏற்படாமல் தடுக்கமுடியாது, காரணம் அதிகாரத்தை அனுபவித்தவர்களிடமிருந்து பறித்து எடுத்தால், அவர்கட்கு ஆத்திரம் வரத்தான் செய்யும். அந்தக்காட்சி இரண்டரை ஆண்டு சுதந்திரத்தில், வெகுவேகமாக, அடிக்கடி நடைபெற்று வந்திருக்கிறது. புது அரசியலமைப்பு மூலம் மாகாணம்—மத்திய சர்க்கார் இரண்டு இடத்துக்குமுள்ள பிளவும் பேதமும், குமுறலும் கொந்தளிப்பும், வளரச் செய்ய வழியிருக்கிறதேயொழிய, மங்கிவிடப்போவதில்லை!

அடிமைப்பட்டுக் கிடந்த இப் பரந்த துணைக் கண்டத்தை, அந்நிய ஆதிபத்தியத்திடமிருந்து மீட்கும் வேலையில் காங்கிரஸ் பாடுபட்டது. அதன் விளைவாக சுதந்திர தாகத்தை எழுப்பியதன் காரணமாக நாடெங்கும், வெள்ளையன் ஆட்சி ஒழியவேண்டும் என்று எண்ணங் கொண்டிருந்த மக்கள் மன்றத்தில், காங்கிரசின் செல்வாக்கு வளர்ந்தது. காங்கிரசை நடத்திச் செல்லும் முன்னணியிலிருந்த தலைவர்கள் மட்டும், மக்களுக்கு மகத்தான பாசமும், 'இவர் எம்மை உய்விக்கவந்த உத்தமர்' என்ற எண்ணத்தால் விளைந்த பக்தியும் ஏற்படலாயிற்று.

அன்று சுதந்திரப் போரின்போது ஏற்பட்ட "பக்தி" இன்னும் மாறவில்லை. எனவே, காங்கிரஸ் கட்சியின் முதல் வரிசையிலிருக்கும் (First Rank Leaders) தலைவர்கள், எது சொன்னாலும் சரி, என்ற எண்ணமும், அவர்கள்மீதுள்ள நம்பிக்கையின் காரணமாக 'நல்லது தான் செய்வர்' என்ற கருத்தும், மக்கள் மனதிலே இன்னும் மாறவில்லை.

காங்கிரஸ் ஆட்சி பீடத்தின் முதல்வரிசையிலிருக்கும் நேரு பட்டேல் போன்றோருடைய செல்வாக்கும், 'சுட்டு விரல் காட்டினால் போதும் சொன்னதெல்லாம் செய்வேன்' என்று மக்களிடையில் அவர்கள்மீது எழும்பியுள்ள பக்தியுள்ளமும் இன்னமும் இருக்கிறது. இந்த நிலை பொது மக்களிடம் மட்டும் என்றல்ல! பொது மக்களிடை உலவி வரும் தலைவர்கள்—காங்கிரஸ்காரர்கள்—

எல்லோர் இதயத்திலும், நேரு பட்டேல் போன்ருரிடம் மதிப்பும் மரியாதையும் அளவுக்கு மீறிய வகையிலிருக்கின்றன. அவர்கள் எது சொன்னுலும், அதைச் செய்வதுதான் கடமை, நிறைவேற்றி வைப்பதுதான் தேசீயத் தொண்டு என்ற எண்ணம் நிலவுகிறது. அதன் காரணமாக தப்போ, தவருே, குற்றமோ, குறையோ எது நேர்ந்தாலும், மத்திய சர்க்காரிலும் சரி, மாகாண மந்திரிமார்களிடத்திலும் சரி, அப்போதைக்கப்போது மறைக்கப்பட்டுப்போய்விடுகிறது. இந்த நிலை என்றும் நீடித்து நிலைக்காது ; நீர்க்குமிழிபோல, என்ருவது ஒருமுடிவுக்கு வரத்தான் செய்யும்.

மற்றும் இந்தியா ஒரேநாடு, யாவரும் இந்தியர் என்று வெள்ளையராட்சியை **விரட்ட** காங்கிரஸ் கட்சியினர் எழுப்பிய முழக்கம், இந்நாட்டில் வாழும் பல இன கலாச்சார மக்களுடைய மனதில் நிறைந்து கிடக்கிறது. இந்த ஐக்கிய எண்ணமும், எப்போதும் நீடிக்க முடியாதது. **நாம்யார்**—என்பது, கட்சிப்பற்று, பல்லாண்டுப் பழக்கம் காரணமாக மறைக்கப்பட்டாலும், ஒருநாள், ஒளி வீசத்தான் செய்யும். அதற்கான அறிகுறிகளும் இப்போதே தெரிகின்றன !

நேரு, பட்டேல் போன்ற முதல் வரிசைத் தலைவர்களுக்கு அடுத்த படியாக, அவர்கள் இடத்தை "**நிரப்ப**" காங்கிரஸ் கட்சியில் யாரும் இல்லை. யார், அந்த இடத்துக்கு வந்தாலும், இப்போதிருக்கும் அவ்வளவு செல்வாக்கும் மதிப்பும் ஏற்பட முடியாது.

எனவே எதிர்காலத்தில், அந்த இடத்தில் அமருப வர்கள் தங்கள் ஆட்சிப்பொறுப்பையேற்று அதிகாரம் நடத்தத் துவங்கும்போது, மறைந்து கிடக்கும் மனக் குறைகள், மகத்தானதாகத் தெரிய ஆரம்பிக்கும். பிரகாசம் பேச ஆரம்பிப்பார். நேற்றுவரை அவர்கூட இருந்து அவரளவு மதிப்பு பெற்றிருந்த ஒருவர் குடியரசு தலைவராக ஆனல், காரசாரமாக! காமராஜருக்கும் அந்த அளவு துணிவும், வேகமும் பிறக்கலாம்—இது இன்றைய அரசியலமைப்பில் "டெல்லி"யில் கொண்டு போய் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களையும், எதிர் காலத்தையும், ஒப்பிட்டுப் பார்க்கும்போது நன்கு விளங்கும்.

இப்போதே மாகாணங்களில்—காங்கிரஸ் ஆட்சி யினரிடையிலேயே—மத்திய சர்க்கார்மீது எழும்பி யிருக்கும் ஆத்திரமும், அதிருப்தியும் எதிர்காலத்தில் வளரத்தான் செய்யும். இந்த நிலை ஏற்பட்டால் குமுற லும் கொந்தளிப்பும் ஏற்பட்டு கூடாரத்துக்குள்ளேயே குடுமிப் பிடிச் சண்டை ஆரம்பமாகியே தீரும்.

ஆபத்து நம்மை அணைத்துக்கொண்ட இந்த நேரத் தில், துயர் போக்கவழி கிடைக்குமா, திணிக்கப்பட்ட அரசியலை நீக்க வழி கிடைக்குமா, மாடப்புரு கிட்டுமா என்று எண்ணிப் பார்க்கும்போது, நமது இலட்சியத் துக்கு, விடுதலை வேட்கைக்கு எதிர்பாராத இடத்திலிருந் தெல்லாம் உதவி கிடைக்கும், என்ற நம்பிக்கை ஒளி விடுகிறது.

புது அரசியல் அமைப்பு மூலம், மாகாண அதிகாரங்கள் பறிபோய்விட்டன, கூட்டாட்சிக்குப் பதில் ஒரே நபராட்சி உதயமாகிறது, என்று இந்த நாட்டிலுள்ள முற்போக்குக் கட்சிகள் எல்லாம் கண்டித்திருக்கின்றன; பாசிசமும், முதலாளித்துவமும் கோரவாய் திறந்து கொள்ள வழியமைக்கப்பட்டுவிட்டது என்று கண்டனங்களைச் சொரிந்துள்ளன.

மக்கள் மன்றத்திலே மகிழ்ச்சியில்லை, வளர்ந்துவரும் முற்போக்குக் கட்சிகளும் ஏற்கவில்லை, எங்கும் அதிருப்திமயம்—இந்நிலையில் இந்திய புது அரசியல் ஆரம்பமாகியிருக்கிறது.

எனவே, எதிர்காலம், நமது இலட்சிய வெற்றிக்கு, ஏதுவாக இருக்கும் என்ற நம்பிக்கை நமக்கு ஒளிவிடுகிறது. இந்த அரசியலமைப்புக்குப் பதில், இன்னொன்று ஏற்பட்டுத்தான் தீரும் என்ற நிலை, நம் கண்ணுக்குக் காட்சியளிக்கிறது.

நமது இலட்சியப் பாதையை மூடும் வகையில் இந்த அரசியலமைப்பில் இடங்களிருக்கலாம். நமது உரிமை முழக்கத்துக்கு மூடியிடும் தந்திர சட்ட திட்டங்களும் இருக்கலாம். நம் கடமைப் பாதையைத் தடுக்கும் வழி வகைகள் இருக்கலாம். எனினும் நாம் கோழைகளல்ல; வீரர் பரம்பரை!

'தவறிவிட்டோம்' என்ற மனக்குறையை, 'தவற மாட்டோம்' என்ற கவனப் பொறுப்பால் மாற்றி, நம்

மக்கள் சமுதாயம் விடுதலை பெறும் வழியைக் காண்போம்.

கலக்கமும் கவலையும் நமக்கில்லை; கடமையும் தொண்டும் நம்மைத் தழுவிக் கிடக்கின்றன! வேதனையும், விம்மலும் விலகட்டும்; வீரர்கள் படை தயாராகட்டும், வெற்றி நமதே; கொட்டு முரசு என்று நாம் கொக்கரிக்கும் நாள் ஒன்று ஏற்பட்டுத்தான் தீரும்!

புது அரசியலமைப்பு நம்மை அடைத்துப்போட்ட புலிக்கூண்டு. அதினின்றும் வெளியேற, தந்திரமும் சாமர்த்தியமும் மட்டும் போதாது. நேர்மையும் நெஞ்சிலுறுதியும் வேண்டும்! ஒற்றுமையும் கூட்டு முன்னணியும் உருவாகவேண்டும்!

ஆகஸ்டு 26—இதற்கான சூழ்நிலையை நமக்கு விளக்கியுள்ளது. அதிருப்தியும் மனக் குறைவும் நமக்குமட்டும் என்றல்ல எல்லோரிடையும் நிலவுகிறது என்பதை எடுத்துக்காட்டிவிட்டது.

# பிரிவினை கீதம்

“**தனி நாடாகவேண்டும்**” என்ற நமது கோரிக்கையைக் கேட்டால், பலர் “முடியுமா” என்று கேள்வி போடுகின்றனர். ‘திராவிடநாடு’ என்று நாம் குறிப்பிடுவது, தற்போதைய சென்னை மாகாணத்தைத்தான். இந்த, விளக்கம் நாம் பன்முறை தந்ததுதான். எனினும், இன்றும் சிலர் ‘சந்தேகத்தோடு’, கேள்விகளை எழுப்புவதால் மீண்டும் கவனத்துக்கு கொண்டுவருகிறோம்.

உலகையே ஆட்டிவைத்த **ஜெர்மனி**யைவிட, திராவிடம் சிறியதா?

உலக வல்லரசுகளில் ஒன்றான **இங்கிலாந்தை விட திராவிடம்** எவ்வளவு பெரியது!

சிறுநாடு பெல்ஜியம், சிதைந்த போலந்து, வல்லரசு நாடுகள் கவனத்தில் நிற்கும் ருமேனியா, இவைகளைவிட நாம் கோரும் திராவிடம், **தனிநாடாக** ஆக முடியாதா?

**ஸ்விட்சர்லாந்து**, டென்மார்க், போர்ச்சுகல், பல்கேரியா, கிரீஸ், நேபாளம், பின்லாந்து—ஆகியவைகள்

தனியரசோடு, தனி நாடாக வாழும்போது அவைகளை யெல்லாம் விட பெரிய நிலப்பரப்பான திராவிடம், தனி நாடாக இருக்கமுடியாதா?

நிலப்பரப்பு மட்டுமல்ல,
**இயற்கை வளம்**
**துறைமுக வளம்**
**மலை வளம்**
**மண் வளம்**

எல்லாம், பன்மடங்கு, நிரம்பியது நாம் கூறும் திராவிட நாடு! பொன் தரும் சுரங்கங்கள், இரும்பு தரும் கனிகள், வெளிநாட்டிலிருந்து பணம் குவிக்கும் மிளகு—மாங்கனீஸ், அமெரிக்கா அள்ளிச் செல்லும் முந்திரி யாவும் இருக்கிறது இங்கு!

மக்கள் நாலரைக் கோடிப்பேர் வாழ்கிறோம்! நமக்கான பொருள்களை நாமே உற்பத்தி செய்து வாழும் வகைகள், இருக்கின்றன!

தேவையான உழைப்புச் சக்தியும் இருக்கிறது!
இருந்தும்,
சிமெண்டுக்கு டால்மியா!
ஆணிக்கு டாட்டா!
ஆடைக்கு ஆமதாபாத்!

என்ற நிலை வளர்கிறது. தென்னாட்டில் போதுமான தொழிற்சாலைகள் இல்லை—இருப்பவைகளாலும் வட நாட்டுடன் போட்டி போட முடியவில்லை. காரணம்,

பெரிய ஆலைகள் அங்கே !
அவைகளை வளர்க்கும் பணம்
அதற்கு ஆதரவு தரும் மந்திரிகள் !
மந்திரிகளையே ஆட்டுவிக்கும் பிர்லாக்கள் !

நிறைந்து விட்டனர், வடநாட்டில், வெள்ளையர் ஆட்சியில், அவர்களோடு கை கோர்த்துக்கொண்டு வடநாட்டு முதலாளிகள் பெரிய உருவங்களாக வளர்ந்துவிட்டனர்.

அந்த வளர்ச்சியை முறியடிக்கும் வழி, நம்மிடம் இல்லை.

அந்த வளர்ச்சியை எதிர்க்க அதிகாரம் நமக்கு இல்லை.

ஆகவே, நம் நாட்டு தொழில் வளம் சிறக்க வக்கில்லை !

இதை மாற்றுமல்—எப்போதும் போல, தென்னாடு வடநாட்டுக்கு அடிமையாயிருக்கும் வகையிலேயே, புது இந்திய அரசியலமைப்பும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

வடநாட்டவர் கண்காணிப்போடு தயாரிக்கப்பட்ட, இந்திய அரசியலமைப்பால், நாம் என்றும் முன்னேற வழியே யில்லை. இரும்புப் பிடிகள், நம்மை பயங்கரமாகப் பிடித்துக்கொண்டுவிட்டன.

திராவிடத்தை, தங்கள் சரக்குகள் விற்கும் சந்தையாக்கி விட்டனர்—வடநாட்டினர்.

பொருள் உற்பத்தி செய்தால், அவைகள் விற்கப் படவேண்டும். விற்ருல்தான், பணம் கிடைக்கும். வாங் கும் இடம் இல்லையென்ருல் பொருளை உற்பத்தி செய் தோர் பணத்தைக் காண முடியாது.

எனவே, வடநாட்டு முதலாளித்துவம் தென் ஞட்டை—திராவிடத்தை—தனது சரக்குகள் விற்கப் படும் சந்தையாக வைக்க விரும்புகிறது. வடநாட்டு ஆலைகள் குவிக்கும் சரக்குகள் எந்த வெளி நாட்டிலும் விலை போகாது. ஆனுல், தென்ஞடு முன்னேருத கார ணத்தால், வடநாட்டு நவீன உற்பத்திப் பொருள்களை வாங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலிருக்கிறது.

இந்தத் துர்ப்பாக்கிய நிலை நீடிக்கவேண்டுமென வட நாட்டு முதலாளிமார் விரும்புகின்றனர்—தங்கள் சுரண் டல் நீடிப்பதற்காக.

அவர்கள் ஆசையை நிறைவேற்றித்தரும் வகையி லேயே வடநாட்டுத் தலைவர்களைக் கொண்ட காங்கிரஸ், நடந்து வருகிறது—அதற்கான சட்டங்களையும் தயாரித் துக்கொண்டு விட்டது, புதிய இந்திய அரசியலமைப்பு மூலம்.

எனவே, தென்ஞடு ஒரு சிறந்த தொழில் வளம் செறிந்த நாடாக ஆகமுடியாது. ஆவதற்கான சூழ்நிலை களும் தென்படவில்லை !

சுருக்கிச் சொன்ஞல் வடநாடு — ‘ இங்கிலாந்து ’ ஆகிறது ! நாம் ‘ அடிமை இந்தியா ’ ஆகிக்கொண்டிருக் கிருேம்.

ஒரு நாட்டின் வளம், அங்கு வாழும் மக்கள், தங்கள் தேவைக்கான பொருள்களைப் பெற்று வாழ்தலைக் கொண்டுதான் நிர்ணயிக்கப்படும். பொருள்களில், இயற்கையாகவே கிடைப்பவை—அவைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்டவை என இருவகையுண்டு. திராவிடம் மூலப்பொருள் உற்பத்திக்கும்—அவைகளைக்கொண்டு பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் வசதிகள், தளும்பி, வழியும் நாடு.

பருத்தி உண்டு — ஆனால் அழகிய ஆடைகளுக்கு ஆமதாபாத், பம்பாயைத்தான் நோக்குகிறோம்!

பருத்தியைக் கொண்டு–பக்கத்திலேயுள்ள கோவையிலேயே நல்ல ஆடைகளைத் தயாரிக்க முடியும்.

ஆனால், அதற்கான வசதிகள் இங்கில்லை—ஆகவே, நல்ல முறையிலும், சகாய விலையிலும் இங்கு தயாரிக்கும் சூழ்நிலை உதயமாகவில்லை. ஆகவே, இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்களால் — வடநாட்டுப் பொருள்களுடன் போட்டிபோட முடியவில்லை.

எலும்புக்கூடு போன்ற உருவமுடையவன், சதை பெருத்த சாண்டோவுடன் சண்டையா போட முடியும்?

வீட்டுக்குச் சுவர், வாயிலுக்கு கதவு, வயலுக்கு வரப்பு—இருந்தால் உள்ளேயிருப்பதை பாதுகாப்போடு இருக்கமுடியும். அதுபோலவே திராவிடத்துக்கும் ஒரு

எல்லைக்கோடு இருந்தால், இங்குள்ள வளம் 'கொள்ளை' போகாமல் காத்துவளர்க்க முடியும்,

நமக்கென ஒரு எல்லை இல்லை. கேட்டால் தேசீயம் பேசுகிறார்கள்—ஏக இந்தியா, அகில இந்தியா, அகண்ட பாரதம், ஐயோ! இதையா துண்டாடுவது என்று துடித்துப் பேசுகிறார்கள். ஒற்றுமையோடு வாழ்வோம்—யாவரும் இந்திய மக்கள், ஐக்கியமே நமது இலட்சியம் என்று அழகுபட, வர்ணிக்கிறார்கள்.

இந்த ஒற்றுமைப் பேச்சு, கவைக்குதவாதது—சொல்ல இனிக்கும், செயலில் வரமுடியாது என்று நாம் கூறி வருகிறோம். நமது கூற்றுக்கள், எவ்வளவு ஜீவ சக்தி நிறைந்தவை என்பதை பல நிகழ்ச்சிகள் படம் பிடித்துத் தந்தவண்ணமிருக்கின்றன.

1. உணவுப் பொருள்களைப் பெருக்கும் திட்டங்களுக்காக, மாகாண சர்க்கார் மத்திய சர்க்காரைக் கடன் கேட்டது—கிடைக்கவில்லை!
2. உணவுப் பஞ்சம் ஏற்பட்டதைக் காட்டி உதவ வேண்டுமென கெஞ்சிக் கேட்டது — பலன் பூஜ்யம்!
3. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நீடிக்கவேண்டும் என சென்னை சர்க்கார் இந்திய சர்க்காருக்கு பன்முறை தெரிவித்திருக்கிறது — இருந்தும் அது கூடாது, ரத்து செய்க என்று டில்லி சர்க்கார் கட்டளை இட்டிருக்கிறது.

மாகாண சர்க்கார் கோரி, மத்திய சர்க்கார் மறுத்து, அம்பலத்துக்கு வந்த நிகழ்ச்சிகள் இவை. வெளிக்குத் தெரியாமல், இன்னும் பல இருக்கலாம். அதேபோல, மத்திய சர்க்கார் கட்டளையிட, அதை மீறி, மாகாண சர்க்கார் நடந்துவரும் நிகழ்ச்சிகளும், தினசரி, வளர்ந்து கொண்டுதான் உள்ளன. அவைகளில், அம்பலத்துக்கு வந்தவை.

1. மதுவிலக்கு இப்போது கூடாது, பிற்பாடு கவனிக்கலாம் என்று டில்லி சர்க்கார் தாக்கீது தந்தது. அதைப் பொருட்படுத்தாது, மாகாண சர்க்கார் மதுவிலக்கை சென்னை மாநிலம் முழுதும் அமுல் நடத்தியது.

2. ஜமீன் ஒழிப்பு மசோதாவை அவசரமாகக் கொண்டு வருதல் வேண்டாம் என்று டில்லி சர்க்கார் 'யோசனை' கூற, அதை ஒருபுறம் தள்ளிவிட்டு, ஜமீன் ஒழிப்பை சட்டமாக்கியது.

3. இந்தி கட்டாய பாடமாக்கப்பட வேண்டும் என்ற டில்லி சர்க்காரின் ஆசையை, அலட்சியம் செய்து மாகாண சர்க்கார் இந்தியை இஷ்ட பாடமாக்கிற்று.

ஒரே நாடு, ஒரே சர்க்கார், ஒற்றுமை ராஜ்யம் என்று பேசும் காங்கிரஸ் கட்சியினர்தான், மாகாணத்திலும், மத்திய சர்க்காரிலும் ஆட்சிபீடத்திலமர்ந்திருப்பவர்கள்!

இருந்தும், இவ்வளவு பெரிய பிரச்னைகளில் ஒன்றுக்கொன்று நேர் எதிரிடையாக நடந்துகொண்டிருக்கின்றன.

“ஐக்கியம் என்று பேசுகிறீர்கள் — இந்தியாவிலுள்ள எல்லாப் பிரதேசங்களும் ஒரே மனப்பண்போடு நடக்கவேண்டும் என்று கர்ச்சிக்கிறீர்கள்! ஆனால் அது நடக்குமா? நடைமுறையில்தான் வரக்கூடியதா? அவரவரும் தத்தமது சுயலாபங்களில்தானே நாட்டங் கொண்டிருப்பர்” என்று நாம் சொன்னால் நம்பாத நண்பர்கள், பலருண்டு நம்மிடையே. அவர்கள் தெளிவு பெறும் வகையிலும், சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

பிரம்மபுத்திரா நதித்தீரத்துலவுபவரும், கங்கையின் மழலையில் மகிழ்பவரும், துங்கபத்திரைக் கரையில் துள்ளித்திரிபவரும், காவிரித் தண்ணீரைப்பருகுபவரும், இமயமுதல் குமரிவரை எல்லோரும் இந்திய மக்கள்! இந்நாட்டுச் சகோதரர்கள்!! என்று கூவி, முழக்குகின்றனர்.

இந்தக் கூச்சல் காதுக்கு இனிப்பு—கருத்துக்குக் கசப்பு என்று நாம் சொன்னால், கெக்கலிப்பர்! ஆனால், அகில இந்தீயம் பேசுவது ஒரு போதும் உண்மையாகிவிட முடியாது என்பதை, கீழ்க்கண்ட சம்பவங்கள் தெளிவாக்கும். சென்னை மாகாணத்தை வட நாட்டு மாகாணங்கள், தொழில் துறையில்மட்டுமின்றி, ஏனைய துறைகளிலும் எத்திப் பிழைக்கும் வழிகள் எத்துணை

யிருக்கின்றன வென்பது விளங்கும். வட நாட்டு மாகாணங்களின், இத்தகைய சுயநலக்கொள்ளைக்கு இந்தியா முழுமையையும் ஆளும்–ஆள ஆசைப்படும்— மத்திய சர்க்காரும், எவ்வளவு ஒத்தூதுகிறது, என்பதும் தெளிவாகும்.

1. அரிசிப் பஞ்சம் தாங்காமல், சென்னை சர்க்கார் அரிசி வேண்டுமென டில்லி சர்க்காரை வேண்டியது. டில்லி சர்க்காரும், ஐக்கியமாகாணத்தில் அரிசி நிறைய இருப்பதால், அங்கிருந்து அனுப்பிவைக்குமாறு, அந்த மாகாண சர்க்காருக்கு கட்டளையிட்டது, கட்டளையின்படி சென்னை சர்க்காருக்கு ஐக்கிய மாகாணத்திலிருந்து அரிசி வந்தது—

   வந்த அரிசி படுமோசமானது மட்டுமல்ல! விலையும், இங்கு விற்பதைவிட பலமடங்கு அதிகம்! இதன் காரணமாக சென்னை சர்க்காரின் கஜானாவிலிருந்து ஒரு கோடி ரூபாய், ஐக்கிய மாகாண சர்க்காருக்குப் போயிற்று.

   பணமில்லை என்று திண்டாடும் திராவிடத்திலிருந்து ஒரு கோடி ரூபாயை வாங்கி, மத்திய சர்க்கார், இன்னொரு மாகாணமான ஐக்கிய மாகாணத்துக்குத்தானம் செய்திருக்கிறது,

2. சர்க்கரை நெருக்கடி கதையும் இதுபோலத்தான். வடநாட்டு ஐக்கிய மாகாணம்—நேரு பிறந்த பிரதேசம்—ஏராளமான பணம்

'கொள்ளை' அடித்தது. அதைத் தடுக்காமல் டில்லி சர்க்காரும் நீண்டநாள் காலத் தவணை செய்து வந்தது.

ஐக்கிய மாகாணமும் சென்னை மாகாணத்தைப் போல் 'இந்திய பாரதபூமி'யில் ஒரு பகுதிதான்! இருந்தும், சென்னை திண்டாடும் போது, உதவும் பெருந்தன்மையோ உதார குணமோ ஏற்படவில்லை அதற்கு.

**ஏற்படவில்லை**—என்பதை நாம் குற்றச்சாட்டாகக் கூறவில்லை.

**ஏற்படமுடியாது!**—இது அப்போதிருந்தே நாம் சொல்லி வருவதாகும்.

ஒரே நாடு என்றாலும், இந்தியா ஒரு பரந்த உப கண்டமாகும். இங்குள்ள ஒவ்வொரு மாகாணமும் ஒவ்வொரு நாடாகும்! ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிட்டால், இது விளங்கும்!

திராவிடநாடு — சென்னை மாகாணம் — 142000 சதுரமைல் பரப்புடையது. உலக வல்லரசுகளிலே ஒன்றான, இங்கிலாந்தைவிட **இரண்டுமடங்கு** பெரியது; நான்கு **ஆஸ்திரியாக்களுக்குச்** சமம்!

| | | | |
|---|---|---|---|
| 10 | **பெல்ஜியம்** | 5 | **பல்கேரியா** |
| 2 | **செக்கோஸ்லோவேக்யா** | 3 | **கிரீஸ்** |
| 4 | **அயர்லந்து** | 10 | **ஹாலந்து** |
| 4 | **போர்ச்சுகல்** | 14 | **பாலஸ்தீன்** (பழைய) |

**முறையே கொண்டது நமது நாடு!**

இருந்தும், இவ்வளவு பெரிய தென்னுடு, வடநாட்டோடு இணைந்து வாழ முடியுமே தவிர, தனித்து எப்படி வாழ முடியும்? திராவிட நாடு என்று ஒரு தனி நாட்டை நிறுவ முடியுமோ? என்று சந்தேகத்தைக் கண்கள் மூலம், கேள்வி ரூபத்தில் கிளப்புகின்றனர், பலர்.

பிரிவினை—என்பது, கேட்டதும் பாச உணர்ச்சி காரணமாக சிறிது கசக்கத்தான் செய்யும். ஆனுல் உண்மை யுணர்வு ஏற்பட்டால், அந்த இலட்சியம், வெற்றுக் கூச்சல் அல்ல, காரிய சாத்தியமானது தான் என்பது விளங்கும்.

பாகிஸ்தான்—கேட்டனர், பலமான எதிர்ப்பு இருந்தது. ஆனுல், பத்து கோடி மக்களின் இலட்சிய கீதம் வீணுகி விடவில்லை! நமது நாட்களிலேயே 'பாரதநாடு' இரண்டாகி, 'பாகிஸ்தான்', 'மிச்ச இந்தியா' ஆகியவைகளையும், இரண்டு சர்க்கார்களையும், பார்க்கிறேம்.

நமது திராவிடஸ்தான் பிரச்னை, பாகிஸ்தானுக்கும் முற்பட்டதாகும். 'பாகிஸ்தான் வேண்டும்' என்று முஸ்லீம் லீக், லாகூர் மாநாட்டில் தீர்மானிக்கு முன்னரே, நமது நாயரும், தியாகராயரும், டாக்டர் நடேசனுரும் 'திராவிடம்' என்ற சொல்லை பயன்படுத்தி வந்தனர். 'திராவிடன்' என்ற பெயரில் தினசரி நடந்த காலமும் உண்டு.

நமது கோரிக்கை--பாகிஸ்தான் வேண்டுமென்ற பத்துகோடி மக்களின் இதயகீதம் எழும்பு முன்னரே,

உருவாகியதாகும். பாகிஸ்தான் கேட்டதற்கான காரணங்களைவிட, திராவிடநாடு நாம் கோருவதற்கு ஆதாரங்கள் அதிகம் உண்டு.

பிரிட்டிஷார் பிடியில் இந்த உபகண்டம் சிக்குமுன், இது ஒரே நாடாக ஒரு போதும் இருந்ததில்லை,

அதிலும் குறிப்பாகத் தென்னடு, எப்போதும் பிற ஆட்சிக்கு ஆட்பட்டதே கிடையாது—வெளி நாட்டினர் நிரந்தரமாக திராவிடத்திலிருந்து ஆட்சி புரிந்தது இல்லை.

பெரிய பெரிய மன்னர்கள், டில்லியில் தர்பார் நடத்தியிருக்கிறுர்கள். அவர்கள் 'ஆசை' திராவிடத்தில் நுழைந்தது இல்லை. வடநாட்டிலே பலத்துடன், பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் இருந்திருக்கின்றன.

| | |
|---|---|
| **சமுத்திரகுப்தன்** | **ஹர்ஷன்** |
| **சந்திரகுப்தன்** | **கனிஷ்கன்** |
| **அசோகன்** | **அவுரங்கசீப்** |

**அக்பர்** போன்றுர் ஆட்சி புரிந்திருக்கின்றனர், அவரும், எவரும் திராவிடத்தை அடிமைகொண்டதில்லை. சேரனும் சோழனும் பாண்டியனும், செந்தமிழ் பரப்பியே இருந்திருக்கின்றனர்!

தனித்த நாடாக, திராவிடம், தளிர் மலர்ச்சோலையாக வாழ்ந்த, காலம் ஒன்றுண்டு. பொன்னும் மணி

யும், கன்னலும் செந்நெலும் கவின்பெற்றுத் திகழ்ந்தது தான் தென்னாடு.

முடியுடை மூவேந்தர்கள், தமிழகத்தின் காவலர் களாக இருந்தனர்—கன்னித் தமிழின் மடிமீது அவர்கள் மகிழ்ந்தனர்.

அந்த நாள்—வீழ்ந்தது !

சோழன் செங்கோல் முறிந்தது—பாண்டியன் முரசும் கிழிந்தது—சேரன், சிங்கநாதம் அழிந்தது. விளைவு—தமிழகம் வந்தாரை வாழ வைக்கும் நாடு ஆயிற்று.

வெள்ளேயர் இந்திய பூபாக முழுவதையும் தந்தி ரோபாயத்தால் தனக்கு அடிமையாக்கியதும், இப்பெரும் நிலப்பரப்பை பல்வேறு மாகாணங்களாக்கினர் தமது ஆட்சி வசதிக்காக.

வெளிநாட்டான் ஆதிக்கத்துக்கு முன்னதாக, இந் தப் பரந்த உபகண்டம் ஒரே நாடாக இருந்ததில்லே.

இந்தியா, பல வேறு இனத்தவர் வாழும் நாடு என் பது, இன்று எல்லோரும் உணர்ந்ததாகும்,

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து இந் நாடு விடுவிக்கப்பட்டதும், இம்மாபெரும் நிலப்பரப்பு தமக்குக் கீழ் கிடக்கவேண்டுமென்ற பேராசை வட இந்தியத் தலேவர்களுக்கு அதிகமாகிவிட்டது. தங்களது மொழியையும்,வாழ்க்கைமுறையையும், எங்கும்திணித்து

இந்தியாவின் பல்வேறு இனத்தாரையும் ஏமாற்ற பல சூழ்ச்சித் திட்டங்கள் வகுத்த வண்ணமே யுள்ளனர்.

இந்த ஆதிபத்திய வெறியின் விளைவாகவே 'பாகிஸ்தான்' மலர்ந்தது. பத்துகோடி முஸ்லீம் மக்களும், இந்து மத ஆதிக்கபுரியிலிருந்து விடுபடவேண்டுமென முரசு எழுப்பி வெற்றி பெற்றுவிட்டனர்.

இப்போது, பஞ்சாப் சீக்கியர் பரணி பாடுகின்றனர், '**அகாலிஸ்தான் வேண்டும்**' என்று.

சீக்கியர்கள், இந்து மதத்தினின்றும் வேறுபட்ட கோட்பாடுகளை யுடையவர்கள். மொழி, வாழ்க்கைவழி, பண்பு எல்லாவற்றிலும் ஏனைய வட இந்தியரைவிடப் பெரிதும் மாறுபட்டவர்கள்.

இந்து மதம் எங்களை வாழ விடாது.

பஞ்சாபில் உள்ள எங்கள் தொகை அதிகம் — ஆனால் மைனாரிடியினராகவே யிருக்கிறோம்.

எங்கள் மொழி பஞ்சாபி.

தாய்மொழி பஞ்சாபியை எங்கள் அரசியல் மொழியாகக் கொண்டு, தனி நாடமைக்க ஆசைகொள்கிறோம்.

எங்களுக்கென ஒரு நாடு ஏற்பட்டால்தான் எங்கள் வாழ்வும், எங்கள் தாய்மொழியும் சிறக்க முடியும்,

இந்தியைத் திணித்து எங்களது பழைமையான தாய்மொழியைச் சிதைக்கத் திட்டமிடுகின்றனர், காங்கிரஸ் ஆட்சியினர்.

பஞ்சாபி மொழி பரிதாபமாகக் கிடக்கிறது—ஆனால் இந்தியை எங்கள் பள்ளிகளில் கட்டாயமாக்கி யிருக்கின் றனர்.

இக்கொடுமை எங்களால் சகிக்க முடியவில்லை—தாங்க முடியவில்லை! **ஆர்ய சமாஜம்**, காங்கிரஸ் இந்துக் களின் துணையோடு கோடிக் கணக்கான எங்களை, கும் மிருட்டில் கிடத்தவே திட்டமிட்டு வருகிறது. அதன் முதல் நடவடிக்கைதான், எங்கள் மொழியைச் சிதைத்து, வேண்டாத இந்திக்கு மகுடம் சூட்டுவது.

மொழியால் மட்டுமல்ல எல்லா விதத்திலும் தனிப் பண்பு படைத்த நாங்கள் இன்று அரசியலில் அனாதை களாக இருக்கிறோம். பொருளாதாரத் துறையில், கேவலமாகக் கிடக்கிறோம்.

உத்யோகங்கள் எங்களவர்க்குக் கிடைப்பதில்லை—அதிலும் இளித்த வாயர்களாக ஆக்கப்பட்டே வரு கிறோம்!

கோடிக் கணக்கில் வாழும் நாங்கள், நல் வாழ்வுக்கு வழியின்றி வதைபட்டுச் சாகிறோம்! இது நீங்கி, நாங் களும் நல்லுரிமையோடு வாழ—எங்களுக்கோர் நாடு தேவை, அதுவே 'அகாலிஸ்தான்' என்று, வெற்றிச் சிந்து பாடியவண்ணமிருக்கின்றனர். உரிமையுணர்ச்சி, தனி நாட்டுக் கோரிக்கை, நம்மிடம் மட்டுமல்ல. அங்கும் தீயென வளர்ந்து கொண்டிருக்கிறது!

உரிமைக் கோரிக்கை ஆங்காங்கும் எழும்புவதைக் காணும் பலர், "பேதம் பார்ப்பானேன்—பிரிந்துபோக எண்ணுவானேன்" என்று கேட்பர். நரியையும் புள்ளி மானையும் சேர்த்துலவச் செய்தால்?

புலியையும் பசுவையும் ஒரே கூண்டில் போட்டடைத்தால்?

தர்மோபதேசம் பலித்தாவிடும்?

அதுபோலவே, இந்திய உபகண்டம், வலுத்த 'புலி'களும் இளைத்த 'பசு'க்களும் அடைக்கப்பட்ட கூண்டாகியிருக்கிறது,

ஒரே கூண்டில் புலியும் பசுவும் இருக்கவேண்டுமென்று கூறுவது ஏதேச்சாதிகாரியின் ஏமாற்றுவித்தை.

ஏமாற்றுவித்தை—பல நாட்களுக்குப் பலிக்காது. இது, மறைக்கமுடியாத உண்மையாகும். இதை எதிரொலிப்பதுதான், நாட்டு மக்களிடை உரிமையுணர்ச்சி வளர்வது! எதிர் முகாமிலிருந்தே, அதற்கான செல்வாக்கும் வளர்ந்துகொண்டு வருகிறது.

பிரிவினைகீதம்—பிணிபோக்கும் மருந்து! அதை, மறைக்கலாம்—ஆனல் நீண்ட நாட்களுக்கு மறுத்துவிட முடியாது.

எரிமலையும் குமுறும் கடலும் எழும்பித்தான் தீரும்!